விலை: 50.00
பக்கங்கள் : 16
website : www.valampurii.lk
viber : 076 636 3378
Registered as a Newspaper in Srilanka

கல்யாண மாலை
சர்வதேச இலவச திருமண சேவை

T.P: 021 720 1005
இல.144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்.
kalyanamalai.jaffna@gmail.com
4000/= மட்டுமே

# வலம்புரி
Valampurii
E-mail: valampurii@yahoo.com
சங்கு 25
ஒலி 352 வள்ளுவர் ஆண்டு 2055 கார்த்திகை 20 வியாழக்கிழமை (05.12.2024) தொலைபேசி 222 3378, பக்ஸ் 222 7829

### ஜனாதிபதியின் கொள்கைப் பிரகடனம்

# வாக்கெடுப்பின்றி நிறைவேற்றம்

(கொழும்பு)

ஜனாதிபதி அநுர குமார திஸாநாயக்கவினால் பாராளு மன்றத்தில் முன்வைக்கப்பட்ட அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனம் வாக்கெடுப்பின்றி ஏகமனதாகப் பாராளுமன்றத்தில் நிறைவேற்றப்பட்டது.

(15ஆம் பக்கம் பார்க்க)

### பயங்கரவாதச் சட்டத்தில் கைதான

## யாழ்.இணுவிலைச் சேர்ந்த இளைஞன் பிணையில் விடுதலை

(யாழ்ப்பாணம்)

பயங்கரவாதத்தடைச்சட்டத் தின் கீழ் கைது செய்யப்பட்ட யாழ்ப்பாணம் - இணுவிலைச் சேர்ந்த இளைஞனை பிணை யில் செல்ல யாழ். நீதவான் நீதி மன்றம் அனுமதித் துள்ளது.

15

## கிளிநொச்சி வர்த்தக நிலையத்தில் தீ விபத்து

(கிளிநொச்சி)

கிளிநொச்சியில் வர்த்தக நிலையம் ஒன்றில் தீ விபத்து ஏற்பட்டுள்ளது.

நேற்று புதன்கிழமை காலை குறித்த வர்த்தக நிலையத்தில் தீ பரவியுள்ளது.

அயலவர்களின் உதவி யுடன் குறித்த தீயானது கட் டுப்பாட்டுக்குள் கொண்டு வரப்பட்டுள்ளது. (ம-7)

# அடுத்த வருட இறுதியில் மாகாண சபைத் தேர்தல்

### தமிழரசுக் கட்சி எம்.பிக்களிடம் ஜனாதிபதி அநுர தெரிவிப்பு



- பயங்கரவாதச் சட்டத்தை அமுலாக்க விரும்பவில்லை.
- புதிய அரசியலமைப்பு வரும்வரை 13ஆம் திருத்தம் தொடரும்.

(02ஆம் பக்கம் பார்க்க)

## பூநகரியில் நீரில் மூழ்கிய நிலையில் சடலம் மீட்பு

(கொழும்பு)

பரந்தன் பூநகரி வீதியின் செல்விபுரம் பகுதியில் வீதியின் கரையில் நீரினுள் மூழ்கிய நிலையில் சடலம் ஒன்று நேற்று மீட்கப்பட்டுள்ளது.

பூநகரி பள்ளிக்குடாப் பகுதியைச் சேர்ந்த செல்லையா கனிஷ்டநாதன் (வயது-69) என்பவரே இவ்வாறு சடலமாக மீட்கப்பட்டுள்ளார்.

குறித்த சம்பவம் தொடர்பாக பூநகரி

15

### திடீர் சுகவீனம்

## யாழ்.அரியாலையில் இளம் தாய் மரணம்

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் அரியாலைப் பகுதியில் திடீர் சுக வீனம் காரணமாக இளம் தாயொருவர் உயிரிழந் துள்ளார்.

ஜீவராஜ் ரேவதி (வயது-38) என்ற இரு பிள்ளைகளின் தாயே இவ்வாறு உயிரி

15

## தரமற்ற 500க்கும் அதிகமான மருந்துகள் புழக்கத்தில்

(கொழும்பு)

தேசிய மருந்து

15

## மேதகுவுக்கு வீரவணக்கம்

### தனது கன்னியுரையில் அர்ச்சுனா



(கொழும்பு)

மேதகு அவர்களுக்கு வீர வணக் கம் என பராளுமன்ற உறுப்பினர் மருத்துவர் இராமநாதன் அர்ச்சுனா கன்னியுரையின் ஆரம்பத்தில் தெரி வித்தார்.

ஜனாதிபதியின் கொள்கை விளக்க உரை மீது நேற்றுப் புதன் கிழமை பாராளுமன்றத் தில் தனதுகன்னியுரையை

15

## பனைக் குற்றி கடத்தியவர் யாழில் கைது

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணம் - வட்டுக் கோட்டைப் பகுதியில் பனை மரக் குற்றிகளைக் கடத்திச் சென்ற சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்

02

## வடக்கில் தொழில் முனைவோருக்கான வாய்ப்புக்களை ஆராயுங்கள்

### சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிரதிநிதிகளிடம் ஆளுநர்



(யாழ்ப்பாணம்)

வடக்கில் தொழில் முனைவோருக் கான வாய்ப்புக்

02

## 32 மதுபானசாலை அனுமதி வடக்குக்கு ரணிலால் வழங்கப்பட்டன

### கிளிநொச்சி 16 யாழ்ப்பாணம் 5

(யாழ்ப்பாணம்)

வடக்கு மாகாணத்துக்கு. 32 மதுபானசாலைகளுக்கான அனுமதிப் பத்திரங்களை முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்க வழங்கியுள் ளார்.

இதில் கிளிநொச்சி மாவட் டத்துக்கு 16 அனுமதிப்பத் திரங்களும் யாழ்.மாவட்டத் துக்கு 5 அனுமதிப் பத்திரங்களும் வழங்

02

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பரமேஸ்வரம் மலர் வெளியீடு நாளை

(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாணப் பல்கலைக் கழக வளாகத்தில் அமைந் துள்ள பார்வதி பரமேஸ்வரர் ஆலய மகா கும்பாபிசேக "பரமேஸ்வரம்" மலர் வெளி யீட்டு விழா நாளை 6 ஆம் திகதி வெள்ளிக்கிழமை பிற் பகல் 2 மணிக்கு யாழ். பல் கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும்.

வாழ்நாள் பேராசிரியர் சி.க.சிற்றம்பலம் தலைமை யில் இடம்பெறும் இந் நிகழ் வில், வரவேற்புரையை பேரா சிரியர் பூ.ஐங்கரன் நிகழ்த்த, ஆசியுரையை இந்துக் கற்கைகள் பீடாதிபதி பிரம்ம ஸ்ரீ ச.பத்மநாப சர்மா வழங்கு வார்.

தொடர்ந்து வாழ்த்துரையை கலாநிதி ஆறு. திருமுருகன் நிகழ்த்துவார்.

பரமேஸ்வரம் மலரை துணை வேந்தர் பேராசிரியர் சி.ஸ்ரீசற்குணராஜா வெளியி ட்டு வைக்க, நயப்புரையை வலம்புரி நாளிதழின் பிரதம ஆசிரியர் ந.விஜயசுந்தரம் நிகழ்த்துவார்.

ஏற்புரையை தமிழ்த்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் ஈ.குமரன் ஆற்ற, நன்றியு ரையை கணக்கீட்டுத்துறைத் தலைவர் ச.பாலபுத்திரன் ஆற்றவுள்ளார்.

தொடர்ந்து கலை நிகழ் வுகளும் இடம்பெறும். (ம-7)

# சேர்.பொன். இராமநாதனின் 94 ஆவது குருபூசை நாளை

(யாழ்ப்பாணம்)

சைவப் பெருவள்ளல் சேர். பொன். இராமநாதன் அவர் களின் 94 ஆவது குருபூசை நாளை 6 ஆம் திகதி வெள் ளிக்கிழமை இடம்பெறவுள் ளது.

அன்றைய நாள் காலை 8 மணிக்கு யாழ். பல்கலைக் கழக பரமேஸ்வரன் ஆலயத் தில் விசேட பூசை வழிபாடுகள் இடம்பெற்றுத் தொடர்ந்து யாழ். பல்கலைக்கழக வளா கத்திலும் சபா மண்டபத்திலும் உள்ள சேர்.பொன்.இராம நாதன் பிரபுவின் திருவுருவப் படத்திற்கு மலர் மாலை அணி விக்கப்படும். (ம-7)

# உலக வங்கி பணிப்பாளருடன் ஜனாதிபதி அநுர சந்திப்பு



(கொழும்பு)

அரசாங்கத்தின் Clean Sri Lanka வேலைத்திட்டத்திற்கு உலக வங்கியின் உதவிகள் வழங்கப்படுமென உலக வங் கியின் நிறைவேற்றுப் பணிப் பாளர் பரமேஷ்வரன் ஐயர் தெரிவித்தார்.

உலக வங்கியின் நிறை வேற்று பணிப்பாளர் நேற்று (04) ஜனாதிபதி அலுவலகத் தில் ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவை சந்தித்து கலந்துரையாடியபோதே இத னைத் தெரிவித்தார்.

ஜனாதிபதி தலைமையி லான புதிய அரசாங்கத்துக்கு வாழ்த்து தெரிவித்த உலக வங்கியின் நிறைவேற்றுப் பணிப்பாளர், உலக வங்கி யின் ஒத்துழைப்புடன் முன் னெடுக்கப்படும் அனைத்துத் திட்டங்களும் எதிர்காலத்தி லும் அவ்வண்ணமே முன்னெ டுக்கப்படும் என்றும் உறுதிய ளித்தார்.

அதேபோல புதிய அர சாங்கத்தின் அபிவிருத்தி திட் டம், கிராமிய வறுமையை ஒழித்தலுக்கான திட்டங்கள், பொருளாதார டிஜிட்டல் மய மாக்கல் வேலைத்திட்டத்து க்கு இணையான டிஜிட்டல் அடையாள அட்டை வழங்கு வதற்கான வேலைத்திட்டம் என்பன குறித்தும் ஜனாதிபதி நீண்ட கலந்துரையாடலில் ஈடுபட்டார்.

தோட்ட மக்களின் காணி மற்றும் வீட்டுப் பிரச்சினைகள் மற்றும் வடக்கு கிழக்கு மக் கள் நீண்டகாலமாக முகம் கொடுத்திருக்கும் பிரச்சினை களுக்கு தீர்வு தேடுவது குறித் தும் இதன்போது கலந்துரை யாடப்பட்டது. (ம-7)

## அடுத்த...

ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்க மற்றும் இலங் கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப்பினர்க ளுக்கு இடையிலான சந்திப்பு, நேற்று பிற்பகல் ஜனாதிபதி அலுவலகத்தில் நடைபெற் றது.

இதன்போது இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளு மன்ற உறுப்பினர்கள், நீண்ட காலமாக வடக்கு மற்றும் கிழ க்கு மக்கள் முகங்கொடுத்து வரும் பிரச்சினைகள் குறித்து ஜனாதிபதியிடம் விளக்க மளித்தனர்.

இதன்போது கருத்து தெரி வித்த ஜனாதிபதி அநுர புதிய அரசியலமைப்பு வரும் வரை 13 ஆம் திருத்த சட்டம் தொடர் ந்தும் அமுலில் இருக்கும் என தெரிவித்தார்.

மேலும் அடுத்த வருட இறுதியில் மாகாண சபைத் தேர்தலை நடத்த திட்டமிட் டுள்ளதாகவும் தெரிவித்தார்.

எதிர்காலத்தில் பயங்க ரவாத தடைச்சட்டத்தை நடை முறைப்படுத்த விரும்ப வில்லை என ஜனாதிபதி அநுர குமார திஸாநயக்க தம் மிடம் கூறியதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக் களப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்துள் ளார்.

சில இனவாத கருத்துக் களால் அதனைப் பயன்படு த்த வேண்டிய தேவை ஏற்பட் டதாக ஜனாதிபதி தெரிவித் தாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

அதேநேரம், வடக்கு கிழக்கு இணைந்த சமஸ்டி அடிப்படையிலான தீர்வு, அர சியல் கைதிகளின் விடுதலை, பயங்கரவாத எதிர்ப்பு சட்டம், காணி அபகரிப்பு, காணாமல் ஆக்கப்பட்டோருக்கான நீதி உள்ளிட்ட பல விடயங்கள் குறித்து ஜனாதிபதியுடன் கலந் துரையாடியதாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் மட்டக்க ளப்பு மாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக்கியன் தெரிவித்து ள்ளார்.

சுமார் ஒரு மணி நேரம் இடம்பெற்ற கலந்துரையா டலில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் பாராளுமன்ற உறுப் பினர்களான சிவஞானம் சிறீ தரன், பத்மநாதன் சத்தியலிங் கம், எஸ்.குகதாசன், ஞான முத்து ஸ்ரீநேசன், கவீந்திரன் கோடீஸ்வரன், இளையதம்பி சிறிநாத், இராசமாணிக்கம் சாணக்கியன் மற்றும் துரை ராசா ரவிகரன் ஆகியோர் கலந்து கொண்டனர். (ம-7)

## வடக்கில்...

களை ஆராயுமாறு சர்வதேச தொழிலாளர் அமைப்பின் பிர திநிதிகளிடம் வடக்கு ஆளுநர் கோரிக்கை விடுத்தார்.

வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் அவர்களுக் கும், சர்வதேச தொழிலாளர் அமைப்பின் (ஐ.எல்.ஓ.) பிரதம தொழில்நுட்ப ஆலோசகர் தோமஸ் கிரிங் அவர்களுக்கும் இடையிலான சந்திப்பு வடக்கு மாகாண ஆளுநர் செயல கத்தில் நேற்று புதன்கிழமை (04.12.2024) இடம்பெற்றது.

கடந்த காலத்தில் வடக்கு மாகாணத்தில் ஐ.எல்.ஓ. அமைப்பால் முன்னெடுக்கப் பட்ட திட்டங்கள் தொடர்பில் ஆளுநருக்கு எடுத்துரைக்கப் பட்டது. ஆரம்பிக்கப்பட்ட திட் டங்கள் அடுத்த ஆண்டுடன் முடிவுக்கு வரவுள்ளதாகவும் ஆலோசகர் தோமஸ் கிரிங் அவர்களால் தெரிவிக்கப் பட்டது.

மேலும் வடக்கிலுள்ள சிறிய மற்றும் நடுத்தர தொழி ல்முனைவோருக்கு எதிர்கா லத்தில் உதவுவதற்கான வாய்ப்புக்கள் தொடர்பில் ஆராயுமாறும் ஆளுநர் இதன் போது கேட்டுக்கொண்டார்.

போர் காலத்துக்கு முன்னர் வன்னிப் பெரு நிலப்பரப்பில் அமைந்துள்ள மிகப்பெரிய குளங்கள் ஊடாக பல்வேறு பயிர்ச்செய்கை நடவடிக்கை கள் மேற்கொள்ளப்பட்ட தாக வும் தற்போது அவை நெற் பயிர்ச்செய்கையுடன் மாத்திரம் முடங்கியுள்ளதாகவும் சுட் டிக்காட்டிய ஆளுநர், இத னால் ஏற்றுமதி வாய்ப்புக்கள் குறைவடைந்துள்ளன எனவும் குறிப்பிட்டார். (ம-7,33)

## பனைக்...

டுள்ளார்.

குறித்த கைது நடவடிக் கையானது நேற்று(4) வட்டுக் கோட்டை தபால் நிலையத் திற்கு அருகே மேற்கொள் ளப்பட்டுள்ளது.

குறித்த சந்தேகநபர் பனை மரக் குற்றிகளை அனுமதிப் பத்திரம் இன்றி கடத்திச் செல்வதாக வட்டுக்கோட்டை பொலிஸாருக்கு கிடைத்த இரகசிய தகவலையடுத்து கைது செய்யப்பட்டுள்ளார்.

இதன்போது, சந்தேகநப ரிடம் இருந்து 5 பனை மரக் குற்றிகள் மீட்கப்பட்டுள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

இந்தநிலையில், சந்தேக நபரை மேலதிக விசாரணை களின் பின்னர் மல்லாகம் நீதிமன்றத்தில் முற்படுத்திய வேளை அவரை பிணையில் செல்ல நீதிவான் அனுமதி அளித்துள்ளார். (ம-7)

## 32 மதுபான...

கப்பட்டுள்ளன.

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் வழங்கப்பட்ட மதுபான அனு மதிப்பத்திரங்கள் தொடர்பான தகவல்களை அமைச்சரும் சபை முதல்வருமான பிமல் ரத்நாயக்க நேற்று (04) பாரா ளுமன்றத்தில் வெளியிட்டார்.

இதற்கமைய மொத்தமாக 362 அனுமதிப் பத்திரங்கள் வழங்கப்பட்டுள்ளன.

இவற்றில் 172 அனுமதிப் பத்திரங்கள் FL4 எனப்படும் சில்லறை மதுபான விற்பனை (wine stores) அனுமதிப் பத்தி ரங்களாகும்.

மேல் மாகாணத்துக்கு 110 மதுபான அனுமதிப் பத்தி ரங்களும்,

தென் மாகாணத்துக்கு 48, வடக்கு மாகாணத்துக்கு 32, கிழக்கு மாகாணத்துக்கு 22, மத்திய மாகாணத்துக்கு 45, வடமத்திய மாகாணத்துக்கு 14, வடமேல் மாகாணத்துக்கு 30, ஊவா மாகாணத்துக்கு 30, சப்ரகமுவ மாகாணத்துக்கு 30 என்ற அடிப்படையில் 331 மதுபான அனுமதிப் பத்திரங் கள் வழங்கப்பட்டுள்ளன.


மாவட்ட ரீதியில்

கொழும்பு 22, கம்பஹா 18, களுத்துறை 8, காலி 9, மாத் தறை 5, அம்பாந்தோட்டை 5, யாழ்ப்பாணம் 5, கிளிநொச்சி 16, வவுனியா 2, மன்னார் 2, திருகோணமலை 4, மட்டக் களப்பு 1, அம்பாறை 5, கண்டி 11, மாத்தளை 6, நுவரெலியா 8, அநுராதபுரம் 4, பொலன றுவை 3, புத்தளம் 6, குரு நாகல் 8, பதுளை 9, மொன ராகலை 7, இரத்தினபுரி 6, கேகாலை 2 என்ற அடிப்ப டையில் வழங்கப்பட்டுள்ளன.

முல்லைத்தீவு மாவட்டத் திற்கு எந்த விதமான மதுபான அனுமதிப் பத்திரங்களும் வழங்கப்பட்டிருக்கவில்லை.

புதிதாக மதுபானசாலைக் கான அனுமதிப் பத்திரங் களைப் பெற்றுக் கொண்ட வர்களின் பட்டியல் வெளிப்ப டுத்தப்பட வேண்டும் என பாராளுமன்ற உறுப்பினர் இராசமாணிக்கம் சாணக் கியன் நேற்று காலை பாராளு மன்றில் வலியுறுத்தியிருந் தமை குறிப்பிடத்தக்கது. (ம-7)

நல்லை மங்கையர்க்கரசியின்
விழிநீர் அஞ்சலி



எமது பாடசாலையின் சங்கீத பாட
ஆசிரியை திருமதி கலைச்செல்வி
ஜெயகாந்தன் அவர்களின்
அன்பு மாமனார்

சின்னையா
ஜெகநாதன்

அவர்களின் பிரிவால்
துயருற்றிருக்கும்
குடும்பத்தினருக்கு
எமது விழிநீர் அஞ்சலியை
தெரிவித்துக் கொள்கின்றோம்.
அன்னாரின் ஆத்மா சாந்தியடைய
இறைவனைப் பிரார்த்திக்கின்றோம்.

(C-1723)

ஆசிரியர் நலன்புரிக் கழகம்,
யா/நல்லூர் மங்கையர்க்கரசி வித்தியாலயம்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சீரற்ற காலநிலை காரணமாக

## 100 இற்கும் மேற்பட்ட கால்நடைகள் உயிரிழப்பு

**(கண்டாவளை) சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ள பாதிப்பு காரணமாக கிளிநொச்சி மாவட்டத்தில் நூற்றுக்கும் மேற்பட்ட கால் நடைகள் உயிரிழந் திருப்பதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.**

கிளிநொச்சி மாவட்டத்தின் கரைச்சி, கண்டாவளை, பச்சிலைப்பள்ளி, பூநகரி ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் அதிகளவான கால்நடைகள் உயிரிழந்துள்ளன.

அத்துடன் மாவட்டத்தில் உள்ள கால்நடை பண்ணையாளர்கள் தற்போதைய மேய்ச்சல் தரவையின்மை மற்றும் இயற்கை அனர்த்தம் என்பவற்றால் தங்களுடைய கால்நடை வளம் அழிந்து வருவதாக தெரிவித்துள்ளனர்.


தங்களது வாழ்வாதாரமாகவுள்ள கால்நடைகளை பாதுகாக்க முடியாதிருப்பதாகவும் கால்நடை பண்ணையாளர்கள் சுட்டிக்காட்டி உள்ளனர்.

இந்த நிலையில் வாழ்வாதாரத்திற்காக வழங்கப்பட்டுள்ள கால்நடைகள் பலவும் நோய் வாய்ப்பட்டு காணப்படுகின்றன.

இதனால் மாவட்டத்தின் பால் உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளதுடன் கால்நடைகளும் அழியும் அபாய நிலை காணப்படுவதாகவும் பண்ணையாளர்கள் தெரிவித்துள்ளனர். (6-8-315)

# ரூபிக்ஸ் கியூப்களில் ஜனாதிபதியின் உருவப்படம்

## 11 வயதுச் சிறுவன் உலக சாதனை



(கொழும்பு) சன்சுல் செஹன்ஷா லக்மால் என்ற 11 வயது சிறுவன் 1,200 ரூபிக்ஸ் கியூப்களை பயன்படுத்தி 91 அங்குல உயரமும் 68 அங்குல அகலமும் கொண்ட ஜனாதிபதி அநுரகுமார திஸாநாயக்கவின் பாரிய உருவப்படத்தை உருவாக்கி உலக சாதனை படைத்துள்ளார்.

அவர் இந்த சாதனையை 3 மணி நேரம், 13 நிமிடங்கள், 7 வினாடிகளில் செய்து சோழன் உலக சாதனைகளில் இடம் பெற்றார்.சோழன் புக் ஆஃப் வேர்ல்ட் ரெக்கார்ட்ஸ் மற்றும் பீப்பிள்ஸ் ஹெல்பிங் பீப்பிள் ஃபவுண்டேஷன் ஆகியவை இணைந்து நேற்று முன்தினம் இந்த நிகழ்வினை ஏற்பாடு செய்திருந்தன. (நி-8)

# புதுப்பிக்கத்தக்க மின்திட்டங்கள்; சமர்ப்பிக்கப்பட்டது ஆய்வறிக்கை

(கொழும்பு) நாட்டில் நடைமுறைப்படுத்த திட்டமிடப்பட்டுள்ள புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்கள் குறித்து ஆய்வு செய்வதற்காக நியமிக்கப்பட்ட குழுவின் அறிக்கை எரிசக்தி அமைச்சிடம் கையளிக்கப்பட்டுள்ளது.

குறித்த குழுவினால் சுமார் 40 செயற்றிட்டங்கள் ஆராயப்பட்டு அறிக்கை தயாரிக்கப்பட்டுள்ளதாக அதன் செயலாளர் பேராசிரியர் உதயங்க ஹேமபால குறிப்பிட்டுள்ளார்.

அது தொடர்பான அறிக்கைகளை நடைமுறைப்படுத்துவதற்கு பல பரிந்துரைகள் செய்யப்பட்டுள்ளதாகவும் அதில் சில பரிந்துரைகள் அமைச்சரவையில் சமர்ப்பிக்கப்படும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

அமைச்சரவையில் எடுக்கப்பட்ட தீர்மானத்தின் பிர காரம் உரிய திட்டங்களை நடைமுறைப்படுத்துவது தொடர்பான மேலதிக நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படும் என்றும் உதயங்க ஹேமபால மேலும் தெரிவித்துள்ளார்.

புதிய மின்சார சட்டத்தின் பிரகாரம் எதிர்வரும் ஜூன் மாதத்திற்கு முன்னர் ஆரம்பிக்கப்படாவிட்டால் சம்பந்தப்பட்ட புதுப்பிக்கத்தக்க மின் திட்டங்கள் இரத்து செய்யப்படும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

குறிப்பாக இதனுடன் தொடர்புடைய திட்டங்களில் இருந்து 250 மெகாவாட் மின்சாரம் உற்பத்தி செய்யப்படும் என எதிர்பார்க்கப்படுவதாகவும் எரிசக்தி அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

# இராணுவ புலனாய்வு பணிப்பாளர் அதிரடி இடமாற்றம்

(கொழும்பு) இராணுவ புலனாய்வுப் பிரிவின் பணிப்பாளர் பிரிகேடியர் சந்திக்க மஹாதந்தில உடனடியாக அமுலாகும் வகையில் இடமாற்றம் செய்யப்பட்டுள்ளார்.

அவர் இராணுவ மேல் மாகாண கட்டளை தலைமையகத்திற்கு மாற்றப்பட்டுள்ளார்.

சுமார் 20 வருடகாலம் இராணுவ புலனாய்வுப் பிரிவில் பல முக்கிய பதவிகளை சந்திக்க வகித்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# அரிசிக்கு தட்டுப்பாடு ஏற்பட வாய்ப்பு

(கொழும்பு) எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் அரிசியை இறக்குமதி செய்வதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்காவிட்டால் அரிசிக்கு கடும் தட்டுப்பாடு ஏற்படும் என அகில இலங்கை சிறு மற்றும் நடுத்தர விவசாயிகள் சங்கம் தெரிவித்துள்ளது.

எனவே, இந்தப் பிரச்சினையை தீர்ப்பதற்கான நீண்டகால வேலைத்திட்டத்தை தயாரிப்பது அரசாங்கத்தின் பொறுப்பாகும் என சங்கத்தின் தலைவர் யு.கே.சேமசிங்க குறிப்பிட்டார்.

பீயர், கால்நடை தீவன உற்பத்திக்கான அரிசி விநியோகத்தை ஒழுங்குபடுத்துவது மிகவும் முக்கியமானது என்றும் வலியுறுத்தினார். (நி-8)

# தென்கொரியாவில் அமைதியின்மை இலங்கையர் தொடர்பில் அவதானம்

## இலங்கை வெளிவிவகார அமைச்சு

(கொழும்பு) தென்கொரியாவில் ஏற்பட்டுள்ள அரசியல் அமைதியின்மை தொடர்பில் அவதானித்து வருவதாக இலங்கை வெளிவிவகார அமைச்சு தெரிவித்துள்ளது.

தென்கொரிய ஜனாதிபதியினால் அங்கு அவசரகால இராணுவச் சட்டம் அமுல்படுத்தப்பட்ட நிலையில் அங்கு ஆர்ப்பாட்டங்கள் வலுப்பெற்றுள்ளன.

பின்னர் குறித்த சட்டத்தைத் தளர்த்துவதற்கான யோசனை தென்கொரிய பாராளுமன்றில் நிறைவேற்றப்பட்டது.

அதேநேரம், குறித்த சட்டத்தைத் தளர்த்துவதாக தென்கொரிய ஜனாதிபதியும் அறிவித்துள்ளார்.

எவ்வாறாயினும் அங்குள்ள பல தொழிற்சங்கங்கள் பணிப்புறக்கணிப்பை அறிவித்துள்ளதுடன் பல பகுதிகளில் ஆர்ப்பாட்டங்களும் முன்னெடுக்கப்படுகின்றன.

இந்தநிலையில் அங்குள்ள இலங்கையர்கள் தொடர்பில் தொடர்ந்தும் அவதானம் செலுத்தியுள்ளதாக வெளிவிவகார மற்றும் வெளிநாட்டு வேலைவாய்ப்பு பிரதி அமைச்சர் அருண் ஹேமசந்திரா தெரிவித்தார்.

தேவை ஏற்படுமாயின் அங்குள்ள இலங்கையர்கள் மீண்டும் நாட்டுக்கு அழைத்து வருவதற்கான நடவடிக்கை எடுக்கப்படும் எனவும் அவர் குறிப்பிட்டார். (நி-8)

# ஓடும் ரயிலில் செல்ஃபி சுற்றுலா பயணி படுகாயம்

(பதுளை) எல்ல - கொழும்பு சுற்றுலா ரயிலில் செல்ஃபி எடுக்க முற்பட்ட வெளி நாட்டு சுற்றுலாப் பயணி ஒருவர் ஒஹிய - இடல்கஸ்ஹின்ன ரயில் நிலையத்திற்கு அருகில் உள்ள கம்பத்தில் மோதுண்டு காயமடைந்துள்ளார்.

37 வயதுடைய ஈரானைச் சேர்ந்த பெண் சுற்றுலாப் பயணி ஒருவரே இவ்வாறு காயமடைந்துள்ளார்.

தற்சமயம் அவர் சிகிச்சைக்காக நுவரெலியா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

நானுஓயாவிற்கு சென்று திரும்பிக்கொண்டிருந்த பெண் ரயிலின் மிதி பலகையில் நின்று செல்ஃபி எடுக்க முற்பட்டபோதே இந்த விபத்து நிகழ்ந்துள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர். (நி-8)

# சமூக ஊடகங்களில் இனவாதம் தூண்டும் மொட்டுக் கட்சி

## சுட்டிக்காட்டிய அமைச்சர் நளிந்த



(கொழும்பு) பொலிஸ் விசாரணைகளின் படி தடை செய்யப்பட்ட அமைப்புகளின் சின்னங்களை சமூக ஊடகங்கள் ஊடாக விளம்பரப்படுத்துபவர்களில் கணிசமானவர்கள் ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனவைச் சேர்ந்தவர்கள் என அமைச்சரவை ஊடகப் பேச்சாளர் சுகாதார மற்றும் வெகுஜன ஊடக அமைச்சர் நளிந்த ஜயதிஸ்ஸ நேற்று முன்தினம் அமைச்சரவை முடிவுகளை அறிவிக்கும் செய்தியாளர் சந்திப்பில் அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸ் விசாரணைகள் நடத்தப்பட்டு எதிர்காலத்தில் சட்டம் நடைமுறைப்படுத்தப்பட்டு புதிய சட்டங்கள் தயாரிக்கப்படும் அல்லது இனவாதம் தோற்கடிக்கப்படும் என அமைச்சர் தெரிவித்தார்.

இனவாதம் மற்றும் மதவாத அடிப்படையிலான அரசியலை ஊக்குவிக்க இந்த அரசாங்கம் இடமளிக்காது எனவும் அவர் மேலும் குறிப்பிட்டுள்ளார். (நி-8)

Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

# விளையாட்டுச் செய்திகள்

## டெஸ்ட் சம்பியன்ஷிப் தரவரிசை 3 புள்ளிகளை இழந்த நியூசிலாந்து



நியூசிலாந்துக்கு உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 3 புள்ளிகளை ஐசிசி குறைத்துள்ளது.

ஐசிசி நடத்தும் 2023-2025 உலக டெஸ்ட் சம்பியன்ஷிப் 2025 ஆம் ஆண்டு நடைபெறவுள்ளது. இன்னும் 16 போட்டிகள் மட்டுமே மீதமுள்ளது.

இறுதிப்போட்டிக்கு தகுதி பெற இந்தியா, நடப்பு சம்பியன் அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா, நியூசிலாந்து, இலங்கை ஆகிய அணிகள் இறுதிப் போட்டிக்கு முன்னேற கடும் போட்டியிடுகின்றன.

இதற்கிடையே, நியூசிலாந்தில் சுற்றுப்பயணம் செய்துள்ள இங்கிலாந்து அணி 3 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடி வருகிறது. முதல் டெஸ்டில் இங்கிலாந்து அபார வெற்றி பெற்று தொடரில் 1-0 என முன்னிலை வகிக்கிறது.

இந்நிலையில், இங்கிலாந்துக்கு எதிரான டெஸ்ட் தொடரில் நியூசிலாந்து அணி தாமதமாக பந்து வீசியதால் அந்த அணிக்கு உலக டெஸ்ட் சாம்பியன்ஷிப் புள்ளிப்பட்டியலில் 3 புள்ளிகளைக் குறைத்துள்ளது.

இதனால் புள்ளிப்பட்டியலில் 4 ஆவது இடத்தில் இருந்த நியூசிலாந்து அணி 5 ஆவது இடத்துக்கு தள்ளப்பட்டுள்ளது. இதன்மூலம் இலங்கை அணி இறுதிப் போட்டிக்குள் நுழைய வாய்ப்பு ஏற்பட்டுள்ளது. (6-8)

## மே.இ.தீவுகளை வீழ்த்தி தொடரை சமன் செய்த பங்களாதேஷ்



மேற்கிந்திய தீவுகளை வீழ்த்தி தொடரை சமன் செய்தது பங்களாதேஷ் அணி.

மேற்கிந்திய தீவுகளில் சுற்றுப் பயணம் மேற்கொண்டுள்ள பங்களாதேஷ் அணி 2 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் விளையாடியது. இந்தத் தொடரில் முதல் போட்டியில் மேற்கிந்திய தீவுகள் அணி வெற்றிபெற்ற நிலையில் 2 ஆவது போட்டி சபினா பார்க் மைதானத்தில் நடைபெற்றது.

இதில், டாஸ் வென்ற பங்களாதேஷ் அணி முதலில் பட்டிங் செய்து 164 ரன்களுக்கு ஆல்-அவுட் ஆனது. ஷட்மன் இஸ்லாம் 64 ரன்கள் எடுத்தார். ஜேடன் 4 விக்கெட்டுகளை வீழ்த்தினார்.

தனது முதல் இன்னிங்ஸை ஆடிய மேற்கிந்திய தீவுகள் அணி 146 ரன்களுக்கு ஆல் அவுட் ஆன நிலையில் 18 ரன்கள் முன்னிலையுடன் 2 ஆவது இன்னிங்ஸை ஆடிய பங்களாதேஷ் அணி 268 ரன்களுக்கு ஆல்-ஆவுட் ஆனது. ஜேக்கர் அலி 91 ரன்கள் எடுத்து அவுட்டானார்.

பின்னர் 287 ரன்கள் எடுத்தால் வெற்றி என்ற இலக்குடன் களமிறங்கிய மேற்கிந்திய தீவுகள் அணி 185 விக்கெட்டுகளையும் இழந்தது. இதனால், பங்களாதேஷ் அணி 101 ரன்கள் வித்தியாசத்தில் அபார வெற்றிபெற்றது.

இதன்மூலம் 2 போட்டிகள் கொண்ட தொடர் 1-1 என்ற கணக்கில் சமனில் முடிந்தது.

இவ்விரு அணிகளும் மோதும் முதலாவது ஒருநாள் போட்டி கிழக்கு நெப்ராஸ்காவில் உள்ள வெர்னர் பார்க்கில் வருகிற டிசெம்பர் 8 ஆம் திகதி நடைபெறவுள்ளது. (6-8)

## ரூ.2.63 கோடிக்கு ஏலம் போன பிராட்மேன் தொப்பி






அவுஸ்திரேலிய கிரிக்கெட் ஜாம்பவான் சர் டான் பிராட்மேனின் "பேக்கி கிரீன்" தொப்பி நேற்று முன்தினம் சிட்னியில் நடந்த ஏலத்தில் விற்கப்பட்டது.

1947-1948 இல் இந்தியாவுக்கு எதிரான அவுஸ்திரேலியாவிற்காக கடைசியாக விளையாடிய டெஸ்ட் தொடரின் போது பிராட்மேன் அணிந்திருந்த தொப்பி 3,90,000 டொலருக்கு (ரூ.2.14 கோடி), வரியுடன் சேர்த்து 479,700 டொலராக (ரூ.2.63 கோடி) உயர்த்தப்பட்டு விலைக்கு வாங்கப்பட்டது.

டான் பிராட்மேன் 52 டெஸ்ட் போட்டிகளில் 29 சதங்கள் மற்றும் 13 அரை சதங்களுடன் 6996 ரன்களை எடுத்துள்ளார். இவர் அதிக இரட்டை சதங்கள் (12), அதிக முச்சதங்கள் (2) அடித்தவர் என்ற சாதனையை படைத்தவர்.

இந்தியா சுதந்திரம் அடைந்த பிறகு அவுஸ்திரேலியா இங்கு நடைபெற்ற டெஸ்ட் தொடரில் சுற்றுப்பயணம் மேற்கொண்டு டெஸ்ட் போட்டிகளில் விளையாடியது. அப்போது பிராட்மேன் முதல் தர போட்டிகளில் தனது 100 ஆவது சதத்தை நிறைவு செய்தார்.

3 டெஸ்ட் போட்டிகளில் 6 இன்னிங்ஸில் பட்டிங் செய்த பிராட்மேன், 178.75 சராசரியுடன் 715 ரன்கள் எடுத்தார். அதில் 3 சதங்களை பதிவு செய்தது மட்டுமல்லாமல் அதில் ஒன்று இரட்டை சதமும் விளாசினார்.

அந்தத் தொடரில் இந்திய அணியின் மேலாளருக்கு டான் பிராட்மேன் தனது தொப்பியை பரிசளித்தார். பல ஆண்டுகளுக்குப் பிறகு பழங்காலப் பொருள்கள் வாங்கும் சேகரிப்பாளர் ஒருவரால் அந்தத் தொப்பி வாங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (6-8)

## இந்தியா-அவுஸ்திரேலியா பிங்க் பந்து போட்டி சவாலானது ஸ்டீவ்ஸ்மித்



இந்தியா - அவுஸ்திரேலியா அணிகள் நாளை பிங்க் பந்து டெஸ்ட் போட்டியில் அடிலெய்டு நகரில் விளையாட உள்ளன.

பெர்த்தில் நடைபெற்ற முதல் டெஸ்ட் போட்டியில் அவுஸ்திரேலியா 295 ரன்கள் வித்தியாசத்தில் தோல்வி அடைந்திருந்தது. இதனால் அந்த அணி 5 போட்டிகள் கொண்ட டெஸ்ட் தொடரில் 0-1 என பின்தங்கி உள்ளதால் நெருக்கடியுடன் பகலிரவு டெஸ்ட் போட்டியை அணுகுகிறது.

இந்நிலையில் அவுஸ்திரேலிய அணியின் பட்ஸ்மேனான ஸ்டீவ் ஸ்மித் கூறும்போது, "பிங்க் பந்து டெஸ்ட் போட்டியானது, நீங்கள் பட்டிங் செய்யும் வரிசை, விளையாட்டின் நிலைமை மற்றும் பந்தின் தன்மை உள்ளிட்ட பல்வேறு விடயங்களைப் பொறுத்தும் பகல் அல்லது இரவின் வெவ்வேறு நேரங்களில் சவாலாக இருக்கும்.

இதனால் என்ன நடக்கிறது என்பதை அறிந்து செயற்பட வேண்டும். பிங்க் பந்து சில நேரங்களில் கொஞ்சம் கணிக்க முடியாததாக இருக்கும். இதனால் கவனமுடன் செயற்பட வேண்டும்" என்றார். (6-8)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# வடக்கில் ஒரு சட்டம் தெற்கில் ஒரு சட்டம்

## தயாசிறி கண்டனம்



(கொழும்பு)

வடக்கில் ஒரு சட்டம், தெற்கில் ஒரு சட்டம் நடைமுறைப்படுத்தப்படுவதாக பாராளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜெயசேகர தெரிவித்துள்ளார்.

பாராளுமன்றில் நேற்று உரையாற்றியபோதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். இது குறித்து அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது "இனவாதத்துக்கு நாம் எப்போதும் எதிரானவர்கள். அதேபோன்று உயிரிழந்தவர்களுக்கு நினைவுக்கூர்தல்களை நடத்த அனைவருக்கும் உரிமை உண்டு என்பதையும் ஏற்றுக் கொள்கிறோம்.

சிவாஜிலிங்கம் போன்றோர் வடக்கில் பயங்கரவாதிகளை நினைவுக்கூர்ந்தனர். ஆனால், தேசிய மக்கள் சக்தி அரசாங்கம், வடக்கில் கைதுகளை செய்வதற்கு குற்றவியல் சட்டத்தையும் தெற்கில் உள்ளவர்களை கைதுசெய்ய பயங்கரவாதத் தடைச் சட்டத்தையும் பயன்படுத்தியுள்ளது" எனத் தெரிவித்தார். (நி-8)

# யாழில் டெங்கு தீவிரம்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாண மாவட்டத்தில் கோப்பாய் மற்றும் உரும்பிராய் பகுதிகளில் டெங்கு தொற்று தீவிரமடைந்துள்ளதாக யாழ்ப்பாண பிராந்திய சுகாதார சேவைகள் பணிப்பாளர் மருத்துவ கலாநிதி கேதீஸ்வரன் தெரிவித்துள்ளார்.**

அவர் மேலும் தெரிவித்ததாவது, யாழ்ப்பாணத்தில் அண்மைக்காலமாக டெங்கு தொற்று தீவிரமாகி வருகின்றது.

இந்த வருடத்தில் இதுவரையான காலப்பகுதியில் 5 ஆயிரத்து 453 பேர் டெங்கு தொற்றால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

செப்ரெம்பர் மாதம் 42 பேரும், ஒக்டோபர் மாதம் 69 பேரும், நவம்பர் மாதம் 134 பேரும் டெங்கு தொற்றாளர்களாக அடையாளம் காணப்பட்டுள்ளனர்.

இதன் அடிப்படையில் நாளுக்கு நாள் டெங்கு தொற்று மிகவும் ஆபத்தானதாக மாறி வருகின்றமை தெளிவாகிறது.

யாழ்ப்பாணம், கோப்பாய், கரவெட்டி, பருத்தித்துறை, சண்டிலிப்பாய், சங்கானை, சாவகச்சேரி ஆகிய சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுகளிலும் டெங்குத்தொற்று பரவி வருகிறது.

குறிப்பாக, யாழ்ப்பாணம் மாநகர சபையின் எல்லைக்குட்பட்ட கொழும்புத்துறையிலும் கோப்பாய் சுகாதார மருத்துவ அதிகாரி பிரிவுக்குட்பட்ட உரும்பிராயிலும் டெங்குத் தொற்று மிக வேகமாக பரவி வருகிறது என அவர் தெரிவித்தார். (நி-8)

# தற்பாதுகாப்புக்காக துப்பாக்கி வழங்க அமைச்சு தீர்மானம்

(கொழும்பு)

தற்பாதுகாப்புக்காக அதிக பட்சமாக ஒருவருக்கு ஒரு துப்பாக்கியை மாத்திரம் வழங்குவதற்குப் பாதுகாப்பு அமைச்சு தீர்மானித்துள்ளது.

தற்பாதுகாப்புக்காகத் தனி நபர்களுக்கு வழங்கப்பட்டுள்ள அனைத்து வகையான துப்பாக்கிகள் மற்றும் வெடிபொருட்களை, எண்ணிக்கை சரி பார்ப்புக்காக மீளச் சமர்ப்பிப்பதற்குக் கடந்த மாதம் 21 ஆம் திகதி வரை பாதுகாப்பு அமைச்சு கால அவகாசம் வழங்கியிருந்தது.

துப்பாக்கி வழங்கல் தொடர்பில் மேன் முறையீடு செய்யப்படாத மற்றும் உரிய திகதியில் கையளிக்கப்படாத துப்பாக்கிகள் சட்ட விரோதத்துப்பாக்கி களாகக் கருதப்படும் எனவும் பாதுகாப்பு அமைச்சு குறிப்பிட்டுள்ளது. (நி-8)

லங்கா மஹால் (PVT) LTD
DHL
உள்நாட்டு, வெளிநாட்டு விரைவுப் பொதிகள் சேவை
அதிவிரைவாக குறைவான விலையில்
இலவசமாக உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் சேகரிக்கப்படும்.
நம்பகமான சேவை.
(559)
இந்தியாவில் இருந்து இலங்கைக்கு ஆகாய மற்றும் கடல்வழி மார்க்கமூடாக நேரடியாக இறக்குமதி செய்யப்படும் விரைவு பொதிகள் சேவை.
இந்தியா தொடர்புகளுக்கு :
00919566156719
WESTERN UNION WU MoneyGram Ria MONEY TRANSFER
ஊடாக வெளிநாடுகளிலிருந்து அனுப்பப்படும் பணத்தினை எம்மிடம் இருந்து விரைவாக பெற்றுக்கொள்ளலாம்.
யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத்தீவு, வவுனியா, மன்னார், மட்டக்களப்பு, திருகோணமலை, கொழும்பு,
077 839 3974

# சதொச ஊடாக தேங்காய் விற்பனை

(கொழும்பு)

எதிர்வரும் இரண்டு வாரங்களுக்குள் சதொச ஊடாக தேங்காய் ஒன்று 130 ரூபா விற்கு விற்பனை செய்யப்படும் என வர்த்தக, உணவு பாதுகாப்பு மற்றும் கூட்டுறவு அபிவிருத்தி அமைச்சர் வசந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்

பாராளுமன்றத்தில் நேற்று கருத்து தெரிவிக்கும் போதே அவர் இதனை தெரிவித்துள்ளதுடன் இதற்காக பத்து இலட்சம் தேங்காய்கள் விடுவிக்கப்படவுள்ளதாக அமைச்சர் தெரிவித்தார்.

தேங்காய் உற்பத்தி தொடர்பாக அரசுக்கு சொந்தமான நிறுவனங்களின் அமைப்பு உள்ளதுடன் அரசு தோட்டங்களில் உள்ள தென்னை பொருட்களை நகர்ப்புற மக்களுக்கு 130 ரூபாய்க்கு விற்பனை செய்ய நடவடிக்கை எடுத்து வருகிறோம்.

மேலும், அரிசி ஆலை உரிமையாளர்கள் நாளொன்றுக்கு 220 ரூபா விலையில் இரண்டு இலட்சம் கிலோ அரிசியை விடுவிப்பதற்கு இணங்கியுள்ளதாகவும் அமைச்சர் தெரிவித்தார். (நி-8)

பால்நிலை வன்முறைக்கெதிரான 16 நாள் செயற்பாடு
கார்த்திகை 25 - மார்கழி 10
05 மார்கழி 2024
"ஆணாதிக்கம் கொண்டு பெண்களை அடக்காமல் அன்பு கொண்டு அவர்களை பாதுகாப்போம்."
JSAC
16
2024
(சி-1720)
யாழ். சமூக செயற்பாட்டு மையம்

# இராசிபலன்

05.12. 2024
கார்த்திகை 20, வியாழக்கிழமை
சதுர்த்தி பிற்பகல் 12.28 மணிவரை

உத்தராடம் பிற்பகல் 5.27 மணிவரை
சுபநேரம் -7.46-9.16 மணிவரை
இராகுகாலம் 01.46-3.16 மணிவரை

சந்திராஷ்டமம் - மிருகசீரிடம்,திருவாதிரை.

வளவன்


மேஷம்

உறவினர்களும் நண்பர்களும் வலிய வந்து உதவுவார்கள், தூர தேசத்தில் இருந்து சுப செய்திகள் வந்து சேரலாம், இனிமையான நாள் கனவுப் பலிதமுண்டு.


ரிஷபம்

சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காணும் நாள், மனக் குழப்பங்கள் அகன்று மதிப்பும் மரியாதையும் உயரும் நாள், தித்திக்கும் பயணங்கள் இடம்பெறும் நாள்.


மிதுனம்

சில பிரச்சினைகளைக் கண்டும் காணாமலும் இருப்பது நல்லது, திடீர் செலவுகள் ஏற்படலாம், ஆரோக்கியத்தில் கவனம் தேவை, முயற்சிகளில் தாமதம் ஏற்படலாம்.


கடகம்

வராத உறவினர்கள் உங்கள் வீடுகளுக்குத் திடீரென வரலாம், ஆதாயம் தரும் வேலையொன்றில் ஆர்வம் காட்டுவீர்கள், பக்குவமாக நடந்து பாராட்டுப் பெறும்நாள்.


சிம்மம்

இல்லத்திலும் உள்ளத்திலும் அமைதி கூடும், இனத்தார் பகை மாற எடுத்த முயற்சிகள் கைகூடும், நோயிலிருந்து நிவாரணம் பெறுவீர்கள்,இனிமையான நாள்.


கன்னி

உதிரிவருமானங்கள் வந்து சேரலாம் , வழிபாட்டில் ஆர்வம் கூடும் வியாபாரத்தை விரிவுபடுத்தும் எண்ணம் உருவாகும் சுபசெய்திகள் வந்து சேரலாம்.


துலாம்

வீட்டை சீரமைப்பதில் ஆர்வம் காட்டுவீர்கள், நம்பி வந்தவர்களுக்கு நன்மை செய்து மகிழும் நாள், ஊக்கத்தோடும் உற்சாகத்தோடும் பணி புரிவீர்கள்.


விருச்சிகம்

உறவினர்கள் நண்பர்களின் ஒத்துழைப்புக்கிடைக்கும் பொருளாதார நிலையில் முன்னேற்றம் கிடைக்கும் நாள்,பாராட்டும் புகழும் கூடும் நாள்.


தனுசு

ஆரோக்கியத்தில் தெளிவு பிறக்கும் நீண்ட கால விருப்பங்கள் நிறைவுவேறும் வாய்ப்புண்டு, பூர்வீகச் சொத்துக்களால் நன்மையுண்டு, வார்த்தை கவனிப்பு தேவை.


மகரம்

வழிபாட்டால் வளர்ச்சி காண வேண்டிய நாள், பெரியயோர்களின் உதவியால் சில நன்மைகள் பெறலாம்,தொழிலில் நீண்ட நேரம் பணிபுரியும் சூழ்நிலை ஏற்படலாம்.


கும்பம்

தொழிலில் சில மாற்றங்களை செய்ய முற்படுவீர்கள், இறை வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், சிறிய வேலை ஒன்றிற்காக பல முறை அலைய நேரிடலாம்.


மீனம்

அரசு. தொடர்பான காரியங்கள் அனுகூலமாக அமையும் நட்பு வட்டம் விரிவடையும் நாள்,மகிழ்ச்சி தரும் பயணங்கள் இடம்பெறலாம், உற்சாகத்தோடு பணிபுரிவீர்கள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

தன்னைப் பணிவாரைத்தான் பணியும் காலமும் வரும்.

# யாழிற்கு வருகை தரவுள்ள இந்திய முதலீட்டாளர்கள்

(யாழ்ப்பாணம்)

**யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 இற்கும் மேற்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் யாழிற்கு வருகை தரவுள்ளனர்.**

வடக்கு மாகாண தொழிற்துறைத் திணைக்களம், யாழ் இந்தியத் துணைத்தூதரகம் இணைந்து நடத்தும் வட மாகாண தொழிற்துறை வர்த்தகச் சந்தை நேற்று முன்தினம் ஆரம்பமானது .

இந்நிகழ்வில் கலந்து கொண்டு உரையாற்றும் போதே யாழ்.இந்தியத் துணை தூதரக முதன்மை நிர்வாக அதிகாரி ராம் மகேஷ் இவ்வாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், அடுத்த ஆண்டு ஜனவரி மாதம் நடைபெறவுள்ள யாழ்ப்பாணம் சர்வதேச வர்த்தகக் கண்காட்சியில் பங்குபற்றுவதற்காக சுமார் 15 இற்கும் மேற்பட்ட இந்திய முதலீட்டாளர்கள் யாழிற்கு வருகை தரவுள்ளார்கள்.

இந்தியத் துணைத் தூதரகம் ஊடாக இந்திய தொழில்நுட்ப கைத்தொழிலுக்கான கற்கை நெறிகளை பயில்வதற்கான வாய்ப்புகளையும் வழங்கி வருகிறோம் எனத் தெரிவித்தார்.

இந்தக் கண்காட்சியில் வடக்கு மாகாண பிரதம செயலாளர் இளங்கோவன் மற்றும் வடக்கு மாகாண தொழிற்துறை பணிப்பாளர்கள், திணைக்கள அதிகாரிகள், சிறு தொழில் முயற்சியாளர்கள் கலந்து கொண்டார்கள். (6-8-33)



யாழ்ப்பாணம் கோண டாவில் ஈழத்து சபரிமலை சபரீச ஐயப்பன் கோவில் தேர்த் திருவிழா நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பக்திபூர்வமாக இடம் பெற்றது.

(படம்: சிவசாந்தன்)

# கடமைக்கு இடையூறு கைதான இருவர் பிணையில்

(கரணவாய்)

கிராம சேவகரின் கடமைக்கு இடையூறு விளை வித்ததாக பருத்தித்துறை பொலிஸாரால் கைது செய்யப்பட்டு விளக்கமறியல் வைக்கப்பட்டிருந்த இருவரையும் பிணையில் செல்ல பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவு இட்டார்.

சீரற்ற காலநிலையால் ஏற்பட்ட வெள்ளத்தால் கற்கோவளம் நலன்புரி முகாமில் தங்கி இருந்த போது அப்பிரதேசத்தின் கிராம அலுவலரின் கடமைக்கு இடையூறு விளைவித்ததாக பருத்தித்துறை பொலிஸாரால் கடந்த ஞாயிற்றுக்கிழமை கைது செய்யப்பட்டு நீதிமன்றத்தில் முற்படுத்தப் பட்டு இரு நாள் விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த இரண்டு சந்தேக நபர்களும் நேற்று புதன் கிழமை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

சந்தேக நபர்கள் சார்பில் ஆஜரான சட்டத்தரணி விசுவலிங்கம் மணிவண்ணன் பிணை விண்ணப்பம் செய்த நிலையில் இரண்டு சந்தேக நபர்களையும் பிணையில் விடுவிக்கப்பட்டதுடன் வழக்கு எதிர்வரும் ஒன்பதாம் மாதம் எட்டாம் திகதிக்கு ஒத்திவைக்கப்பட்டுள்ளது. (6-8-60)

# இராஜேஸ்வரி அம்மன் ஆலய வழிபாட்டில் ஆளுநர், கட்டளைத்தளபதி




(யாழ்ப்பாணம்)

பலாலியில் மக்கள் வழிபாட்டுக்காக அண்மையில் அனுமதிக்கப்பட்ட ஸ்ரீ இராஜேஸ்வரி அம்மன் ஆலயத்தில் நேற்று புதன்கிழமை இடம்பெற்ற வழிபாடுகளில் வடக்கு மாகாண ஆளுநர், யாழ். மாவட்ட கட்டளைத்தளபதி மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க பங்கேற்றனர்.

இதன்போது ஆலய நிர்வாகத்தினராலும், ஆலயக் குருக்களாலும் ஆளுநர் மற்றும் கட்டளைத் தளபதி ஆகியோர் மதிப்பளிக்கப்பட்டனர்.

இந்த நிகழ்வில் யாழ். மாவட்டச் செயலக மேலதிக மாவட்டச் செயலர் க.சிறிமோகனன், கிராம அலுவலர்கள் மற்றும் பொதுமக்கள் கலந்து கொண்டனர். யாழ். மாவட்ட கட்டளைத் தளபதியாக இருந்த மேஜர் ஜெனரல் சந்தன விக்கிரமசிங்க நேற்று இலங்கை இராணுவ தொண்டர் படையின் தளபதியாக பதவி பொறுப்பேற்றுச் சென்றமை குறிப்பிடத்தக்கது. (6-833)

# கலைத்தூது கலையகத்தில் 'அரங்க வலைகள்' நூல் வெளியீடு




(யாழ்ப்பாணம்)

"கலைமுகம்" இதழில் தை-பங்குனி 1994, இதழ் 11 முதல் ஆடி-மார்கழி 1999, இதழ் 30 வரையிலான 20 இதழ்களில் நீ.மரிய சேவியர் அடிகளார், மேற்புலத்தில் நிலவிய நவ வேட்கைவாத மற்றும் மாற்றரங்குகள் பற்றி "அரங்க வலைகள்" என்னும் பெயரில் தொடராக எழுதிய கட்டுரைகள் நூலாகத் தொகுக்கப்பட்டு குமரன் புத்தக இல்ல வெளியீடாக வெளிவரவுள்ளது.

இந்நூலின் வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை மாலை 4 மணிக்கு இல.286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள கலைத்தூது கலையகத்தில் இடம் பெறவுள்ளது.

யோ.யோண்சன் ராஜ்குமார் தலைமையில் நடைபெறவுள்ள இந்நிகழ்வுக்கு பிரதம விருந்தினராக யாழ். பல்கலைக்கழக ஆங்கில மொழி கற்பித்தல் துறையின் பேராசிரியர் கலாநிதி கந்தையா ஸ்ரீகணேசன் கலந்து கொள்ளவுள்ளார்.

நிகழ்வில் வெளியீட்டுரையை கி.செல்மர் எமில் ஆற்றுவார். மதிப்பீட்டுரைகளை பா.அகிலன், சி.ரமேஷ், நா.நவ ராஜ் ஆகியோர் வழங்குவார்கள். இக்கட்டுரைகள் கலைமுகத்தில் தொடராக வெளிவந்த காலத்தில் மிகுந்த வரவேற்பைப் பெற்றிருந்தமையும் பலராலும் ஆவலுடன் வாசிக்கப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது. (6-8)

# கடற்றொழிலாளர்களை அழைத்து வருமாறு கோரிக்கை

(யாழ்ப்பாணம்)

தமிழ்நாடு, திருச்சி சிறப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ள அனலை தீவு கடற்றொழிலாளர்களை இலங்கைக்கு அழைத்து வருவதற்கு அரசாங்கம் நடவடிக்கை எடுக்க வேண்டும் என கடற்றொழிலாளர்களின் உறவினர்கள் கோரிக்கை விடுத்துள்ளனர்.

கடந்த ஜூன் மாதம் 10 ஆம் திகதி அனலைதீவு பகுதியில் இருந்து கடற்றொழிலுக்கு படகொன்றில் சென்ற இரண்டு கடற்றொழிலாளர்கள், கடல் சீற்றம் காரணமாக தமிழக கடற்பரப்பினுள் தத்தளித்த நிலையில், தமிழக கடற்றொழிலாளர்களால் மீட்கப்பட்டு தமிழக கடலோர காவல் படையினரிடம் ஒப்படைக்கப்பட்டனர். அவர்கள் இருவரும் விசாரணைகளின் பின்னர் சிறைச்சாலையில் தடுத்து வைக்கப்பட்டிருந்த நிலையில் கடந்த 30 ஆம் திகதி நீதிமன்றால் விடுதலை செய்யப்பட்டுள்ளனர்.

எனவே அவர்கள் இருவரையும் அவர்களின் படகு மற்றும் அதன் வெளியிணைப்பு இயந்திரத்துடன் கடல் வழியாக விடுவிக்க நடவடிக்கை எடுக்க வேண்டும் என உறவினர்கள் கோரியுள்ளனர். (6-8-33)

# கைதான 18 மீனவர்கள் மறியலில்

(கரணவாய்)

இலங்கை கடற்பரப்பில் எல்லை தாண்டி அத்துமீறி மீன்பிடியில் ஈடுபட்டுக் கைதான இந்திய மீனவர்கள் 18 பேரையும் எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு பருத்தித்துறை நீதிமன்ற நீதவான் கிருஷாந்தன் பொன்னுத்துரை உத்தரவிட்டார்.

காரைக்கால் மீன்பிடி துறைமுகத்திலிருந்து மீன்பிடிக்கச் சென்ற நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை அதிகாலை பருத்தித்துறை கடற்பரப்பில் வைத்து எல்லை தாண்டி மீன்பிடித்த குற்றச்சாட்டில் கைது செய்யப்பட்டனர்.

கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் யாழ்ப்பாணம் நீரியல் வளத்துறை அதிகாரிகளிடம் ஒப்படைக்கப்பட்ட நிலையில் பருத்தித்துறை நீதிமன்றத்தில் முற்படுத்தப்பட்டனர்.

இதனையடுத்து இவ் வழக்கை விசாரித்த நீதவான் குறித்த மீனவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிட்டார். (6-8-60)

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

# திருடப்பட்ட சொத்துக்களை மீட்க புதிய சட்டமூலங்கள்



## நீதி அமைச்சர் அதிரடி அறிவிப்பு

(கொழும்பு)

திருடப்பட்ட சொத்துக்களை மீட்பதற்காக அடுத்த காலாண்டில் 3 புதிய சட்ட மூலங்கள் பாராளுமன்றத்தில் சமர்ப்பிக்கப்படும் என நீதி அமைச்சர் ஹர்ஷன நாணயக்கார தெரிவித்தார்.

பாராளுமன்ற அமர்வில் உரையாற்றும் போதே அமைச்சர் இதனைத் தெரிவித்தார்.

குற்றச் சட்டமூலம், மீட்பு, புனர்வாழ்வு மற்றும் திவால் சட்டமூலம், கணக்காய்வு சட்ட மூலம் ஆகியவற்றுக்கான திருத்தங்கள் இவ்வாறு சமர்ப்பிக்கப்படும் என அமைச்சர் மேலும் தெரிவித்தார். (நி-8)

# யாழில் 188 கிலோ கஞ்சா மீட்பு



(யாழ்ப்பாணம்)

யாழ்ப்பாண கடற்பரப்பில் 75 மில்லியன் ரூபாய் பெறுமதியான சுமார் 188 கிலோ 350 கிராம் கேரளக் கஞ்சா பொதிகள் மீட்கப்பட்டுள்ளன.


குருநகரை அண்டிய கடற்பரப்பில் சந்தேகத்திற்கு இடமான முறையில் பயணித்த மீன்பிடி படகொன்றை சுற்றுக்காவல் பணியில் ஈடுபட்டிருந்த கடற்படையினர் வழி மறித்த போது, படகில் இருந்தவர்கள் தப்பி சென்றுள்ளனர்.

இந்நிலையில் கடற்படையினர் படகினை பரிசோதித்த போது படகில் இருந்து சுமார் 188 கிலோ 350 கிராம் கேரளக் கஞ்சா பயண பைகளில் பொதியிடப்பட்ட நிலையில் மீட்கப்பட்டுள்ளன.

அதனை அடுத்து மீட்கப்பட்ட கஞ்சாவையும் கடத்தலுக்கு பயன்படுத்திய படகினையும் மேலதிக சட்ட நடவடிக்கைக்காக யாழ்ப்பாண பொலிஸாரிடம் கடற்படையினர் ஒப்படைத்துள்ளனர். (நி-33)

# பேச்சாளர்களை அல்ல; செயல் வீரர்களையே மக்கள் எதிர்பார்க்கின்றனர்

## நாமல் ராஜபக்ஷ சபையில் தெரிவிப்பு



(கொழும்பு)

முன்னாள் ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவின் பொருளாதார கொள்கையை, தேசிய மக்கள் சக்தி முன்னெடுத்து செல்கின்றதா என்ற சந்தேகம் எழுந்துள்ளதாகவும் எனவே அரசாங்கத்தின் பொருளாதாரக் கொள்கை என்ன என்பதை சபையில் தெளிவுபடுத்த வேண்டும் என பொதுஜன பெரமுனவின் பாராளுமன்ற உறுப்பினர் நாமல் ராஜபக்ஷ நேற்று பாராளுமன்றத்தில் வலியுறுத்தியுள்ளார்.

இது குறித்து நாமல் ராஜபக்சஷ மேலும் தெரிவித்துள்ளதாவது, ஜனாதிபதியின் கொள்கை பிரகடன உரை என்பது தேர்தல் காலத்தில் தெரிவிக்கப்பட்ட விடயங்கள் தான். ஆனால் தேர்தல் காலத்தில் மக்களுக்கு வழங்கப்பட்ட வாக்குறுதிகள் இப்போது நடைமுறைப்படுத்தப்படுகின்றதா? ஜனாதிபதி கொள்ளைப் பிரகடன உரையில் வரியை குறைக்க வேண்டும்.

வருமானத்தை அதிகரிக்க வேண்டும் என்று குறிப்பிட்டிருந்தார். ஆனால் ரணில் முன்னெடுத்த அதே ஒப்பந்தங்களை நடைமுறைப்படுத்த ஐ.எம்.எப் உடன் இணங்கியுள்ளார்.

ஐ.எம்.எப் இன் உடன்படிக்கையுடன் செயற்படுகின்ற நீங்கள் எவ்வாறு உங்களின் கொள்கைகளை நடைமுறைப் படுத்தப் போகின்றீர்கள். ரணில் விக்கிரமசிங்கவின் கொள்கையை முன்னெடுக்கப் போகின்றீர்களா அல்லது உங்கள் கொள்கையுடன் செயற்பட போகின்றீர்களா அரசாங்கம் இந்த சபைக்கு அதனை தெளிவுபடுத்த வேண்டும்.

தேசிய மக்கள் சக்தியில் 159 சிறந்த பேச்சாளர்கள் உள்ளனர். ஜனாதிபதியும் தேர்தல் மேடைகளில் சிறந்த பேச்சாளராக காணப்பட்டிருந்தார். ஆனால் மக்கள் சிறந்த செயல் வீரர்களையே எதிர்பார்க்கின்றனர்"என நாமல் ராஜபக்ஷ தெரிவித்தார். (நி-8)

# வருமான வரிக் கணக்கு; காலக்கெடு நீடிப்பு

(கொழும்பு)

2023/2024 மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு 2024 டிசம்பர் 7 ஆம் திகதி வரை நீடிக்கப்பட்டுள்ளது.

ஆரம்பத்தில், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இந்த மதிப்பீட்டு ஆண்டிற்கான வருமான வரிக் கணக்கைச் சமர்ப்பிப்பதற்கான காலக்கெடு கடந்த நவம்பர் 30 ஆம் திகதியுடன் நிறைவடைவதாக அறிவித்திருந்தது.

எவ்வாறாயினும், பாதகமான காலநிலை காரணமாக பல பகுதிகளுக்கு ஏற்பட்ட பாதிப்புகளை கருத்தில் கொண்டு, காலக்கெடுவை நீடிக்க முடிவு செய்யப்பட்டுள்ளதாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் அறிக்கை ஒன்றில் தெரிவித்துள்ளது.

வரி செலுத்துவோர் புதிய காலக்கெடுவுக்குள் அல்லது அதற்கு முன்னதாக கணக்கை சமர்ப்பித்தால் அபராதம் அல்லது சட்ட நடவடிக்கையை எதிர்கொள்ள மாட்டார்கள் என்றும் திணைக்களம் குறிப்பிட்டது.

வருமான வரி அறிக்கைகள் அதன் ஒன்லைன் அமைப்பு மூலம் மட்டுமே ஏற்றுக் கொள்ளப்படும் என்றும் அத் திணைக்களம் தெரிவித்துள்ளது. (நி-8)

# மக்கள் சந்திப்பு 9 ஆம் திகதி இடம்பெறாது

## ஆளுநரின் ஊடகப்பிரிவு அறிவிப்பு

(யாழ்ப்பாணம்)

எதிர்வரும் 9 ஆம் திகதி திங்கட்கிழமை அன்று வடக்கு மாகாண ஆளுநருடனான பொதுமக்கள் சந்திப்புக்கள் எவையும் இடம்பெறாது என ஆளுநரின் ஊடகப்பிரிவு அறிவித்துள்ளது.

வழமைபோன்று எதிர்வரும் 16 ஆம் திகதி திங்கட்கிழமை காலை 8 மணிக்கு மீண்டும் பொதுமக்கள் சந்திப்புக்கள் ஆரம்பமாகும் என அதில் குறிப்பிடப்பட்டுள்ளது. (நி-6-8-33)


# கல்யாணமாலை

## சர்வதேச திருமண சேவை

| இவர்களுக்கு மணமகள் தேவை | இவர்களுக்கு மணமகன் தேவை |
|---|---|
| பிறப்பு: 1977- இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம் 8 இல் செவ்<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்கடை(Own)(London)<br>எதிர்பார்ப்பு: படித்த பெண்<br>தொ.இ: B/14958 | பிறப்பு-1986 - இந்து<br>நட்சத்திரம்: மிருகசீரிடம்<br>உயரம்: 5'<br>தகைமை/தொழில்:BFA,DO<br>எதிர்பார்ப்பு: விவாகரத்தானவர், உத்தியோகம்<br>தொ.இ: G/14996 |
| பிறப்பு: 1987-இந்து<br>நட்சத்திரம்: ஆயிலியம்<br>கி.பா-27<br>உயரம்:5' 7"<br>தகைமை/தொழில்:BA,MA,Information Assistant<br>எதிர்பார்ப்பு-பட்டதாரி, உத்தியோகம்<br>தொ.இ: B/14962 | பிறப்பு-1993-இந்து<br>நட்சத்திரம்:பரணி<br>உயரம்: 5' 8"<br>தகைமை/தொழில்: பட்டதாரி, ஆசிரியர்<br>எதிர்பார்ப்பு: உத்தியோகம்<br>தொ.இ: G/14999 |
| பிறப்பு:1993-NRC<br>உயரம்:5' 6"<br>தகைமை/தொழில்- A/L, மின் இணைப்பாளர்<br>எதிர்பார்ப்பு: தகுதியான பெண்<br>தொ.இ: B/14963 | பிறப்பு-1998-இந்து<br>நட்சத்திரம்: புனர்பூசம்<br>உயரம்:5' 4"<br>தகைமை/தொழில்:A/L<br>எதிர்பார்ப்பு: தகுதியான ஆண்<br>தொ.இ: G/14979 |

கல்யாணமாலை
இல. 144, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
தொடர்பு:- 021 720 1005, 021 221 5434
E-mail:- kalyanamalai.jaffna@gmail.com
அலுவலக நேரம்:- காலை 9 மணி தொடக்கம் மாலை 5 மணிவரை
விடுமுறை தினம்:- ஞாயிற்றுக்கிழமை
பதிவுக்கட்டணம் 4000 ரூபாய் மட்டும்


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பிரபல சீரியல் நடிகர் நேத்ரன் திடீர் மரணம்

## அதிர்ச்சியில் திரையுலகம்



(சென்னை)


பிரபல சீரியல் நடிகரான நேத்ரன் புற்றுநோயினால் பாதிக்கப்பட்டு சிகிச்சை எடுத்து வந்த நிலையில், நேற்று சிகிச்சை பலனின்றி மரண மடைந்துள்ளார்.

இவரது இறப்பு திரையுலகினரை பேரதிர்ச்சியில் ஆழ்த்தியுள்ளது.

கடந்த சில மாத ங்களாக இவர் புற்று நோயால் பாதிக்கப்பட்டிருப்பதாக அவரது மகள் காணொளி ஒன்றினை வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (நி-8)

# காசா எல்லையில் இஸ்ரேல் தாக்குதல்

## 4 குழந்தைகள் உயிரிழப்பு



(ஜெருசலேம்)

காசா பகுதியில் இஸ்ரேல் நடத்திய வான்வழி தாக்குதலில் நான்கு குழந்தைகள் உட்பட ஐந்து பேர் உயிரிழந்தனர் என்று பாலஸ்தீன மருத்துவ துறை தெரிவித்து இருக்கிறது.

இந்தத் தாக்குதலில் மேலும் 15 பேர், பெரும்பாலும் குழந்தைகள் பலத்த காயமுற்று மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். இது குறித்து இஸ்ரேல் இராணுவம் சார்பில் எந்த தகவலும் வழுங்கப்படவில்லை.

போர் நிறுத்த ஒப்பந்தத்தை ஹிஸ்புல்லா மீறியதாக குற்றம்சாட்டி இஸ்ரேல் தாக்குதலை தீவிரப்படுத்தி வருகிறது. அந்த வகையில் இஸ்ரேல் படைகள் ஆளில்லா விமானம் மற்றும் பீரங்கித் தாக்குதல்களை நடத்தியது. காசாவில் போராடி வரும் ஹமாஸ் அமைப்பினருக்கு ஆதரவாக ஹிஸ்புல்லா கடந்த ஆண்டு இஸ்ரேல் மீது ரொக்கெட்டுகள், ட்ரோன்கள் மற்றும் ஏவுகணைகளை ஏவி தாக்கியது.

கடந்த ஆண்டு ஒக்டோபர் 7 ஆம் திகதி ஹமாஸ் அமைப்பினர் இஸ்ரேலுக்குள் நுழைந்து 1200 பேரை கொன்று குவித்தனர்.

இதில் பெரும்பாலானோர் பொதுமக்கள் ஆவர். மேலும், 250 பேரை பணய கைதிகளாக கைப்பற்றி சென்றது. இதன் காரணமாகத் தான் காசாவில் போர் தொடங்கியது.

ஹமாஸ் மற்றும் இஸ்ரேல் இடையிலான போரில் இதுவரை குறைந்தது 44,500 பாலஸ்தீனியர்கள் கொல்லப்பட்டுள்ளனர். அவர்களில் பாதிக்கும் மேற்பட்டவர்கள் பெண்கள் மற்றும் குழந்தைகள் என்று காசா சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது. (நி-8)

# யூன் சுக் யே

# பதவி விலக வேண்

## அரசியல் எழுச்சி கண்டது தென்

(சியோவ்)

**தென்கொரியாவில் இரவோடு இரவாக அவசரகால சட்டத்தை அந்நாட்டின் ஜனாதிபதி யூன் ச நடைமுறைப்படுத்த அறிவித்ததை தென்கொரியா சட்டமன்றம் ரத்து செய்தது.**

நான்கு தசாப்தங்களுக்கு மேலாக தென் கொரியாவின் முதல் இராணுவச் சட்டத்தை திணிக்க யூனின் அதிர்ச்சி முயற்சி, அதன் நவீன ஜனநாயக வரலாற்றில் நாட்டை அதன் ஆழ்ந்த கொந்தளிப்பில் ஆழ்த்தியது.

இது நாடு முழுவதும் பரவலான கோபம் மற்றும் எதிர்ப்புக்களை தூண்டியதுடன், ஆசியாவின் நான்காவது பெரிய பொருளாதாரத்தில் பல தசாப்தங்களில் மிகப்பெரிய அரசியல் நெருக்கடியையும் ஏற்படுத்தியது.

ஒரு அவசர நள்ளிரவு அமர்வில், ஆளும் மற்றும் எதிர்க் கட்சிகளைச் சேர்ந்த 300 சட்டமியற்றுபவர்களில் 190 பேர் ஒருமனதாக இராணுவச் சட்டத்தை நிராகரிப்பதாக வாக்களித்தனர்.



அவசரகால இராணுவ சட்ட மூலத்தை யூனின்அறிவித்த சில மணி நேரங்களுக்கு பின்னர் இந்த நடவடிக்கை வந்தது.

செவ்வாய்க்கிழமை பிற் பகுதியில் வெளியான

# கனிமம் பொருட்கள் ஏற்றுமதிக்கு தடை

## அமெரிக்காவுக்கு பதிலடி கொடுத்த சீனா



(பீஜிங்)

கேலியம், ஜர்மானியம், ஆன்டமோனி உள்ளிட்ட மிகுந்த முக்கியத்துவம் வாய்ந்த கனிமப் பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்ய சீனா தடைவிதித்துள்ளது.

செமிகண்டக்டர்கள் தொடர்பான பொருட்களை சீனாவுக்கு ஏற்றுமதி செய்ய அமெரிக்கா கட்டுப்பாடுகளை விதித்துள்ளதற்குப் பதிலடியாக இந்த நடவடிக்கையை சீனா மேற்கொண்டுள்ளது.

தங்களின் தேசிய பாதுகாப்புக்கு அச்சுறுத்தல் என்று கூறி, சீனாவுடனான வர்த்தகத்தில் பல்வேறு கட்டுப்பாடுகளை அமெரிக்கா தொடர்ந்து மேற்கொண்டு வருகிறது. இதற்கு சீனா கடும் கண்டனம் தெரிவித்து வருகிறது.

இந்நிலையிலேயே சீனாவுக்கு ஏற்றுமதி செய்வதற்கான கட்டுப்

பா
க
ஏ
இ
உ
சி
டே


தெ
பி
அ
ஏ
டே
ஜ
வு
வு
வ

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# யால்
# ண்டும்!
## ன்கொரியா

ரகால இராணுவ
ர் சுக் யோல்
ரியாவின் தேசிய





திருப்புமுனையான அறிவிப்பு தென்கொரிய சட்டமன்றத்தில் ஒரு முட்டுக்கட்டையை ஏற்படுத்தியது.

இது அரசியல் நடவடிக்கைகளைத் தடைசெய்து ஊடகங்களைத் தணிக்கை செய்யும் ஜனாதிபதியின் முயற்சியை நிராகரித்தது.

இதையடுத்து ஆயுதம் ஏந்திய படையினர் சியோலில் உள்ள தேசிய சட்டமன்றக் கட்டடத்தையும் சுற்றிவளைத்தனர்.

தென் கொரியாவின் தேசிய சட்டமன்றத்திற்கு வெளியே ஆயிரக்கணக்கான எதிர்ப்பாளர்கள் கூடி, இராணுவச் சட்டத்தை திணிப்பதை எதிர்த்து பாராளுமன்றத்துக்குள் உட்பிரவேசிக்க முயன்றனர்.

இதனால், சியோலில் உள்ள சட்டமன்றம் அருகே பாதுகாப்புப் படையினருக்கும் ஆர்ப்பாட்டக்காரர்களுக்கும் இடையே மோதல் வெடித்தது.


டாங்கிகள், கவச வாகனங்கள் மற்றும் தென் கொரியாவின் தற்காப்புக் கட்டளைப் படைகளின் ஆயுதமேந்திய உறுப்பினர்கள் பாராளுன்றத்தின் பாதுகாப்பு பணியினை மேற்கொண்டனர்.

இந்த நிலையில் தென் கொரியாவின் முக்கிய எதிர்க்கட்சி, ஜனாதிபதி யூனை உடனடியாக இராஜினாமா செய்ய வேண்டும் அல்லது பதவி நீக்கத்தை எதிர்கொள்ள வேண்டும் என்று வலியுறுத்தியது.

எதிர்க்கட்சிகளின் கோரிக்கைக்கு யூன் உடனடி பொது பதிலையும் அளிக்கவில்லை. (நி-8)

# ஆபிரிக்காவை உலுக்கும் புதிய வைரஸ் பரவல்!

## எச்சரிக்கும் உலக சுகாதார ஸ்தாபனம்



(ஜெனீவா)

குரங்கம்மை வைரஸைத் தொடர்ந்து ப்ளீடிங் ஐ வைரஸ் என்ற நோய் ஆபிரிக்காவை உலுக்கி வருகிறது.

குறிப்பாக கிழக்கு ஆபிரிக்க நாடான ருவாண்டாவில் பாதிப்பு மிக மோசமாக இருக்கிறது. இதனால் ருவாண்டாவில் மட்டும் சுமார் 15 பேர் உயிரிழந்துள்ளனர்.

கடந்த இரண்டு மாதங்களில் மட்டும் இது 17 ஆபிரிக்க நாடுகளுக்குப் பரவியுள்ளது.

இந்நிலையில் பிரேசில், கென்யா, ருவாண்டா, கொங்கோ, உகண்டா, பொலிவியா உள்ளிட்ட இந்த 15 நாடுகளுக்குச் செல்லும் தங்கள் நாட்டுப் பயணிகளுக்குப் பிரிட்டன் அரசு எச்சரிக்கை விடுத்துள்ளது.

மார்பர்க் மட்டுமின்றி கிளேட் 1 மற்றும் ஓரோபூச் காய்ச்சலும் இங்குப் பரவி வருவது குறிப்பிடத்தக்கது. இப்பகுதிகளுக்குச் செல்லும் மக்கள் கூடுதல் அவதானத்துடன் இருக்குமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளனர்.

ப்ளீடிங் ஐ வைரஸ் எனப்படும் இந்த மார்பர்க் வைரஸ் நோய் மனிதர்களுக்கு ஏற்படும் மிகவும் ஆபத்தான நோய் என்று உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.

இந்த வைரஸ் நமக்குப் பரவினால் இரண்டு முதல் 21 நாட்களில் அறிகுறிகள் தென்படத் தொடங்கும். அதிக காய்ச்சல், கடுமையான தலைவலி, உடல்வலி ஆகியவை இதன் முக்கிய அறிகுறிகளாகும். வயிற்றுப் போக்கு, வயிற்று வலி, தசைப்பிடிப்பு, குமட்டல் மற்றும் வாந்தி ஆகியவை 3 ஆவது நாளில் இருந்து ஆரம்பிக்கும்.

5 ஆம் நாள் முதல் வாந்தி மற்றும் மலத்தில் இரத்தம் தென்படத் தொடங்கும். மேலும் மூக்கு, கண், காது, வாய் ஆகியவற்றிலிருந்து இரத்தம் கொட்டத் தொடங்கும். எட்டு முதல் ஒன்பது நாட்களுக்குப் பிறகு பாதிப்பு தீவிரமாக இருந்தால் இரத்தப் போக்கு காரணமாக உயிரிழப்பும் கூட ஏற்படலாம்.

இந்த வைரஸால் பாதிக்கப்படுவோரில் சுமார் 50% பேர் உயிரிழக்கும் ஆபத்து இருக்கிறது. இதுவே இதை மிகவும் கொடிய வைரஸாக மாற்றுகிறது. அதேநேரம் தற்போது வரை இந்த கொடூர வைரஸுக்கு தடுப்பூசிகள் அல்லது தடுப்பு சிகிச்சைகள் எதுவும் இதுவரை இல்லை என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

பாடுகள் விதிக்கப்படும் பொருட்களின் பட்டியலில் கணினிகளுக்கான சிப்புகளைத் தயாரிக்கும் இயந்திரங்கள், மென்பொருள்கள், உயர்-அலைத்தொகுப்பு நினைவக சிப்புகள் ஆகியவற்றை அமெரிக்கா சேர்த்தது.

இந்தப் பொருட்கள் உயர் தொழில்நுட்ப பயன்பாடுகளுக்கு மிகவும் இன்றியமையாதவை ஆகும். சீன இறக்குமதி பொருள்களுக்கு கூடுதல் வரி வரி விதிக்கப் போவதாக அமெரிக்காவின் அடுத்த ஜனாதிபதியாகப் பொறுப்பேற்கவுள்ள டொனால்ட் ட்ரம்ப் அறிவித்துள்ள சூழலில், பைடன் தலைமையிலான அரசு இந்த அறிவிப்பை வெளியிட்டுள்ளது.

இதற்கு தனது எதிர்ப்பைத் தெரிவிக்கும் வகையில், கேலியம், ஜர்மானியம், ஆன்டமோனி உள்ளிட்ட பொருட்களை அமெரிக்காவுக்கு ஏற்றுமதி செய்யத் தடை விதிக்கப்படுவதாக சீன வர்த்தகத் துறை அமைச்சகம் தற்போது அறிவித்துள்ளது.

அப் பொருட்கள் சாதாரண பற்றரி முதல் பாதுகாப்புத் துறைக்குத் தேவையான ஆயுத தளபாடங்கள் வரை பல்வேறு பொருட்களின் தயாரிப்புக்கு மிகவும் அத்தியாவசியமானது என்பதும் குறிப்பிடத்தக்கது. (நி-8)

# வுஹான் ஆய்வகத்திலிருந்து
# கொவிட் கசிவு

## 2 வருட விசாரணையின் பின் அறிக்கை

கொவிட் தொற்று நோய் உலகைப் பேரழிவிற்கு உட்படுத்திய பல ஆண்டுகளுக்குப் பின்னர், வைரஸ் சீனாவின் வுஹான் ஆய்வகத்திலிருந்து கசிந்திருக்கலாம் என்று அமெரிக்க விசாரணையில் தெரிவிக்கப்பட்டது. குடியரசுக் கட்சியின் தலைமையிலான ஹவுஸ் செலக்ட் துணைக் குழுவானது 1.1 மில்லியன் அமெரிக்கர்களைக் கொன்ற தொற்று நோய் குறித்த இரண்டு ஆண்டு கால விசாரணையை நிறைவு செய்த பின்னர் மேற்கண்ட அறிவிப்பினை கடந்த திங்களன்று வெளியிட்டது.

இந்த ஆய்வானது அமெரிக்காவுக்கும் உலகிற்கும் அடுத்த தொற்று நோயைக் கணிக்கவும் அடுத்த தொற்றுநோயிலிருந்து நம்மைப் பாதுகாத்துக் கொள்ளவும், அடுத்த தொற்று நோயைத் தடுக்கவும் உதவும் என்று குழுவின் குடியரசுக் கட்சியின் தலைவர் பிராட் வென்ஸ்ட்ரப் காங் கிரசிற்கு எழுதிய கடிதத்தில் சுட்டிக்காட்டினார். (நி-8)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# அதிகரித்தது ஏற்றுமதி

## சுங்கத் தரவுகளில் தகவல்

(கொழும்பு)

2023 ஒக்டோபர் மாதத்துடன் ஒப்பிடுகையில், இலங்கையின் பொருட்கள் ஏற்றுமதி அதிகரிப்பானது இந்த ஆண்டு ஒக்டோபரில் 18.22% ஆக அதிகரித்துள்ளது.

அதன்படி, 2024 ஒக்டோபரில் பொருட்கள் ஏற்றுமதியானது 1,097.1 மில்லியன் அமெரிக்க டொலர்களாக பதிவு செய்யப்பட்டுள்ளதாக இலங்கை ஏற்றுமதி அபிவிருத்தி சபை குறிப்பிட்டுள்ளது.

இலங்கை சுங்கத்தால் வெளியிடப்பட்ட தற்காலிக தரவுகளின்படி,

இது முக்கியமாக ஆடை மற்றும் ஜவுளி, தேயிலை, இறப்பர் சார்ந்த பொருட்கள், தேங்காய் சார்ந்த பொருட்கள் மற்றும் வாசனை திரவியங்கள் மற்றும் செறிவூட்டப்பட்ட பொருட்களின் ஏற்றுமதியின் வருமான அதிகரிப்பு காரணமாகும்.

2024 செப்ரெம்பர் உடன் ஒப்பிடும்போது 2024 ஒக்டோபரில் ஏற்றுமதி செயற்றிறன் 8.44% அதிகரித்துள்ளது என்று ஏற்றுமதி அபிவிருத்தி சபை மேலும் தெரிவித்தது.

2024 ஒக்டோபர் மாதத்திற்கான சேவைகள் ஏற்றுமதிகளின் மதிப்பிடப்பட்ட மதிப்பு 323.17 மில்லியன் அமெரிக்க டொலர்கள் ஆகும்.

இது 2023 ஆம் ஆண்டின் தொடர்புடைய காலகட்டத்தை விட 19.75% அதிகரித்துள்ளது. (நி-8)

# நீதிமன்ற அவமதிப்பு வழக்கு ஹிருணிகா விடுதலை

(கொழும்பு)

நீதிமன்றத்தை அவமதித்தமை தொடர்பான வழக்கிலிருந்து முன்னாள் பாராளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமச்சந்திரவை விடுதலை செய்ய மேன்முறையீட்டு நீதிமன்றம் நேற்று புதன்கிழமை உத்தரவிட்டுள்ளது.

நீதிமன்றத்தை அவமதித்ததாக ஹிருணிகா பிரேமச்சந்திரவுக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட மனு விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டபோதே இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது.

கல்கிசை நீதிமன்றம் வழங்கிய உத்தரவு தொடர்பில் ஊடகங்களுக்கு தெரிவித்த கருத்துக்களை மீளப் பெறுவதாகவும் இனிமேல் இவ்வாறான கருத்துக்களை தெரிவிக்க மாட்டேன் எனவும் ஹிருணிகா பிரேமச்சந்திர தனது சட்டத்தரணி ஊடாக நீதிமன்றில் அறிவித்ததையடுத்து இந்த உத்தரவு பிறப்பிக்கப்பட்டுள்ளது. (நி-8)



# சந்தைகளில் நேற்றைய விலை

| மரக்கறி வகைகள் | மருதனார்மடம் | சாவகச்சேரி | நெல்லியடி | கிளிநொச்சி |
|---|---|---|---|---|
| | ரூபா | ரூபா | ரூபா | ரூபா |
| கத்தரிக்காய் | 400 | 450 | 550-690 | 450 |
| உருளைக்கிழங்கு | 220 | 220 | 220 | 250 |
| பச்சைமிளகாய் | 800 | 700 | 800-850 | 600 |
| தக்காளி | 300 | 300 | 450 | 500 |
| மரவள்ளிக்கிழங்கு | 200 | 250 | 100-150 | 150 |
| கோவா | 280 | 200 | 300 | 300 |
| கரட் | 300 | 200 | 300 | 300 |
| பூசணி | 150 | 150 | 120 | 200 |
| புடோல் | 200 | 200 | 200 | 300 |
| வாழைக்காய் | 80 | 100 | 50-60 | 200 |
| சின்ன வெங்காயம் | 300 | 350 | 150-400 | 400 |
| பெரிய வெங்காயம் | 220 | 350 | -- | 400 |
| பாகற்காய் | 400 | 1000 | 700 | 1600 |
| வெண்டக்காய் | 250 | 200 | 300-350 | 300 |
| கருணைக் கிழங்கு | 140 | 200 | 130 | 200 |
| பயற்றங்காய் | 650 | 600 | 550-600 | 1000 |
| லீக்ஸ் | 300 | 300 | 300 | 400 |
| பீற்றூட் | 280 | 400 | 300 | 400 |
| கறிமிளகாய் | 850 | 800 | 560 | 800 |
| முருங்கைக்காய் | 1000 | 1000 | -- | 800 |
| போஞ்சி | 750 | 800 | 600 | 800 |
| கத்தரிதம்புள்ள | 300 | 300 | -- | 400 |
| கீரை - 1 பிடி | 150 | 200 | 150 | 200 |
| தேசிக்காய் | 450 | 400 | 300-350 | 400 |
| தேங்காய் (ஒன்று) | 180 | 150 | 80-140 | 150-200 |
| இராசவள்ளி | 900 | 1200 | 700 | 1200 |
| வெங்காயப்பூ | -- | 500 | -- | -- |
| முள்ளங்கி | 120 | 200 | 100 | 300 |
| பொன்னாங்காணி | 100 | 150 | -- | 60 |
| வல்லாரை | 40 | 100 | 150 | 100 |
| ஈரப்பலா | 120 | 100 | 80 | 150 |

# இன்று ஒரு தகவல் 277



தென்கச்சி.கோ.சுவாமிநாதன்

# தகுதி

காசி மாநகரத்தை பிரும்தத்தன் என்கின்ற ராஜா ஆட்சி செய்து வந்தார். அவர் ஒவ்வொரு வருடமும் ஒரு திருவிழா நடத்துவது வழக்கம். எல்லாத் தேசத்திலிருந்தும் எல்லா வகையான மக்களும் அதிலே கலந்து கொள்வார்கள். ஒரு சமயம் அது மாதிரி விழா நடந்து கொண்டிருந்தது. வைகுண்டத்தி லிருந்தும் தேவலோகத்திலிருந்தும் நிறைய தேவகுமாரர்கள் எல்லாம் காசி நகருக்கு வந்திருந்தார்கள். அதிலே முக்கியமாக ஒரு நான்கு தேவகுமாரர்கள். அந்த நான்கு பேரையும் சுற்றி நிறையக் கூட்டம். அப்படி என்ன விஷேசம் அவர்களிடம்? மற்றவர்களை விட அவர்கள் முகம் அழகாக இருந்ததா? அப்படி இல்லை. அவர்கள் அணிந்திருந்த மலர் மாலைகள் தான் அதற்குக் காரணம். அந்த மாலையிலேயிருந்து அப்படி ஒரு நறுமணத்தை அந்த ஊர் மக்கள் அனுபவித்ததே இல்லை. அது தான் இந்த நான்கு பேரையும் சுற்றி கூட்டம். எல்லோரும் கேள்வி கேட்க ஆரம்பித்து விட்டார்கள். உடனே அந்த நான்கு தேவகுமாரர்களும் எல்லோருக்கும் தெரியும் படியாக வானத்திலே எழும்பி சிறிது உயரமாக நின்று கொண்டார்கள். கீழே நின்று கொண்டிருந்த அரசனிலேயிருந்து ஆண்டி வரைக்கும் ஒருவர் பாக்கி இல்லாமல் ஒரே குரலாக அவர்களைப் பார்த்து எங்களுக்கும் இது மாதிரி மாலை போட்டுக் கொள்ள வேண்டும் என்று ஆசையாக இருக்கின்றது. அதற்கு நீங்கள் தான் அருள் செய்ய வேண்டும் என்று கேட்டுக் கொண்டார்கள். மாலை போட்டுக் கொள்வதற்கு என்றால் எல்லோருக்கும் ஆசையாகத்தானே இருக்கும்.

அந்த நான்கு தேவகுமாரர்களிலே ஒருவர் புத்தர்பிரான். அவர் சொன்னார். பூலோகவாசிகளே! நான் சொல்வதைக் கொஞ்சம் பொறுமையாகக் கேளுங்கள். சுக்காரு என்கின்ற கற்பக விருட்சத்தின் மலர்களாலே தொடுக்கப்பட்டது இந்த மாலை. இதற்கு நிறைய சக்தி உண்டு. எந்தக்காலமும் இது வாடாது. வாசனையும் குறையாது. ஆனால் இதை அணிந்து கொள்ள சில தகுதிகள் தேவை என்றார்.என்ன தகுதி வேண்டும் சொல்லுங்கள்? என்று ஏக காலத்திலே எல்லோரும் சத்தம் போட்டார்கள். தீய இயல்பு உள்ளவர்கள், இழிந்த சிந்தனை, இழிந்த செயல் உள்ளவர்கள் இந்த மாலையை அணிய முடியாது என்றார். அவ்வளவும் தான். கூட்டத்திலே சத்தம் போட்டவர்கள் எல்லாம் அடங்கிப் போனார்கள். இன்னொரு தேவகுமாரர் சொன்னார். அடுத்தவர்கள் பொருளை அபகரிக்காதவன், அடுத்தவர்களுக்கு கெடுதல் செய்ய கூடிய பொய் பேசாதவன், பேராசையினாலே கெட்ட வழியிலே பொருள் ஈட்ட நினைக்காதவன் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம் என்றார்.

கூட்டத்திலே யாரும் முன் வரவில்லை. ஒரே ஒரு ராஜகுரு மட்டும் முன்னாலே வந்தார். பெரியவர், படித்தவர். எனக்கு தகுதி இருக்கிறது அந்த மாலையைப் போட்டுக் கொள்வதற்கு என்றார். வேறு ஒன்றும் இல்லை பொய் சொல்லியாவது அந்த மாலையை வாங்கிவிடுவோம் என்று முடிவு செய்தார். அவ்வளவு தான் மாலையை வாங்கிக் கொண்டார். அடுத்த தேவகுமாரர் பேசினார். யாருக்கு திடமான அறிவும் மனமும் இருக்கின்றதோ யாருக்கு நல்ல காரியங்களிலே அசையாத ஈடுபாடு இருக்கின்றதோ? நல்ல அரிய பொருட்களை தனியாகத் தான் மட்டும் அனுபவிக்க விரும்பாதவர் யாரோ அவர் முன்னாலே வந்து இந்த மாலையை வாங்கலாம் என்றார். அந்தத் தகுதியும் எனக்கு இருக்கின்றது என்றார் ராஜகுரு. மாலையை வாங்கிப் போட்டுக் கொண்டார்.

இன்னொரு தேவகுமாரன் பேச ஆரம்பித்தார். அறநெறியில் செல்வம் சேர்க்க வேண்டும். ஆடம்பரப் பொருட்களுக்கு அடிமையாகக்கூடாது. வெற்றியடைந்தாலும் கர்வம் கொள்ளக் கூடாது. அப்படிப்பட்டவர்கள் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம் என்றார். துணிந்து பொய் சொல்லி அதையும் வாங்கி கழுத்திலே போட்டுக் கொண்டார் இந்த ராஜகுரு. இன்னொரு தேவகுமாரர் சொன்னார். சான்றோர்களை நிந்திக்காதவன், புறம் பேசாதவன் இந்த மாலையைப் போட்டுக் கொள்ளலாம் என்றார். ராஜகுரு அதையும் வாங்கி போட்டுக் கொண்டார். திருவிழா முடிந்தது. எல்லோரும் திரும்பப் போய்விட்டார்கள். மறுநாள் ராஜகுரு நான்கு மாலையையும் போட்டுக் கொண்டு அரசசபைக்கு வந்தார். வந்தவர் மிகவும் அவஸ்தையோடு வந்தார். மாலையெல்லாம் வாடியிருந்தது. வாசனை எதுவும் இல்லை. அதுமட்டுமில்லை. அவருக்கு கடுமையான தலைவலி. துடித்துப் போய்விட்டார். மாலையைக் கழற்றவும் முடியவில்லை. மக்கள் அவரைப் பார்த்துச் சிரிக்க ஆரம்பித்து விட்டார்கள். எதற்கு ஆசைப்பட வேண்டும். ஏன் இப்படி கஷ்டப்பட வேண்டும் என்று. ராஜா பார்த்தார். மறுபடியும் விழாவுக்கு ஏற்பாடு செய்தார். தேவகுமாரர்கள் வந்தார்கள். ராஜகுரு வந்தார். மக்கள் முன்னிலையில் அவர்கள் காலிலே விழுந்து மன்னிப்புக் கேட்டார்.

இந்த மாலையைப் போட்டுக் கொள்கின்ற தகுதி எதுவும் எனக்கு கிடையாது. தகுதியில்லாத ஒருவன் தகாத தகுதியைப் பொய் மூலம் பெறவேண்டும் என்று ஆசைப்படுகின்றார்களே. அவர்களுக்கெல்லாம் என்னுடைய தண்டனை ஒரு எச்சரிக்கையாக இருக்கட்டும் என்றார். அதன்பின் தேவகுமாரர்கள் அவர் கழுத்திலே இருந்த மாலையை கழற்றினார்கள். அந்த மாலை பழையபடி மணம் வீச ஆரம்பித்தது. இதிலிருந்து நாம் தெரிந்து கொள்ள வேண்டிய விடயம் என்ன என்றால் நமக்கு தகுதியில்லாத ஒரு கௌரவம் எங்களிடம் தானாக வந்தால் கூட அதை விலக்கி விடுவது தான் புத்திசாலித்தனம். என்னிடம் ஒருவர் வந்தார். சார் எங்கள் இலக்கிய விழாவிற்கு நீங்கள் தலைமை தாங்க வேண்டும் என்றார். உடனே நான் சொன்னேன். சார் இலக்கியத்தைப் பற்றி பேசுகின்ற தகுதி எனக்கு இல்லை என்றேன். உடனே அவர். அந்தத் தகுதி உங்களுக்கு இல்லை என்பது எனக்கு தெரியும் சார். அதனாலே தான் உங்களை தலைமை தாங்கக் கூப்பிடுகின்றேன் என்றார். அது சரி தலைமை என்றால் அதற்கு இவர் என்னதான் அர்த்தம் செய்கின்றார்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வீதி சீரின்மையால் விவசாயிகள் அவதி



(நெளுக்குளம்)

முல்லைத்தீவு - கொக்குத் தொடுவாய் கமநல சேவை நிலைய பிரிவில் பெரும்பான்மையினத்தவர்களின் ஆக்கிரமிப்பு முற்றுகைக்குள் இருக்கும் தமிழர்களின் பூர்வீக விவசாய நிலங்களான அக்கரைவெளி, எரிஞ்சகாடு, நாயடிச்சமுறிப்பு, பாலங்காடு உள்ளிட்ட வயல் நிலங்களுக்குச் செல்லும் வீதி மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளமையால் குறித்த வயல் நிலங்களில் நெற்பயிற்செய்கை மேற்கொண்டுள்ள விவசாயிகள் பலத்த இடர்பாடுகளுக்கு முகங்கொடுத்து வருகின்றனர்.

இந் நிலையில் மிக மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ள குறித்த வீதியை வன்னிமாவட்ட பாராளுமன்ற உறுப்பினர் துரைராசா ரவிகரன் நேரடியாகச் சென்று பார்வையிட்டதுடன், முல்லைத்தீவு மாவட்ட கமநல அபிவிருத்தித் திணைக்கள உதவி ஆணையாளருடன் தொடர்பு கொண்டு குறித்த வீதியை மிக விரைவாக சீரமைப்புச் செய்யுமாறும் வலியுறுத்தியுள்ளார். (6-8-299)

# கிளிநொச்சி மாவட்ட செயலகத்தில் சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம்

(கண்டாவளை)

கிளிநொச்சி மாவட்டத்தின் இறுதி காலாண்டுக்கான சிறுவர் அபிவிருத்திக் குழுக்கூட்டம் நேற்று நடைபெற்றுள்ளது.

மாவட்ட பதில் அரசாங்க அதிபர் எஸ்.முரளிதரனின் தலைமையில், மாவட்ட செயலக மாநாட்டு மண்டபத்தில் காலை 10 மணிக்கு இடம்பெற்றது.

இதன்போது, கடந்த காலாண்டு கலந்துரையாடலின் போது இனங்காணப்பட்ட பிரச்சினைகள் தொடர்பில் மேற்கொள்ளப்பட்ட தீர்மானங்கள், அவற்றை நடைமுறைப்படுத்தியதனூடாக ஏற்பட்ட முன்னேற்றங்கள், சிரமங்கள் தொடர்பாகவும் புதிதாக அடையாளப் படுத்தப்பட்ட பிரச்சினைகள் அவற்றுக்கான தீர்மானங்கள் குறித்தான விடயங்கள் கலந்துரையாடப்பட்டன.

மேலும் தற்போதைய சூழ்நிலையில் மாவட்ட ரீதியில் சிறுவர்கள் எதிர்கொள்ளும் பிரச்சினைகள், சிறுவர் அபிவிருத்தி தொடர்பான விடயங்கள் மற்றும் பாடசாலை மாணவர்களின் வரவு ஒழுங்கின்மை, இடைவிலகல் தொடர்பாக ஆராயப்பட்டு மாணவர்களின் மீளிணைப்பு செயற்பாடுகள் தொடர்பாக கலந்துரையாடப்பட்டன.

இக் கலந்துரையாடலில் மாவட்ட மேலதிக அரசாங்க அதிபர் உதவி மாவட்ட செயலாளர், உதவிபிரதேச செயலாளர்கள், அலுவலக உத்தியோகத்தர்கள், கல்வித் திணைக்கள அதிகாரிகள், தொழில் திணைக்கள உத்தியோகத்தர்கள், மாவட்ட செயலக மற்றும் பிரதேச செயலக சிறுவர் பெண்கள் பிரிவின் உத்தியோகத்தர்கள், துறைசார்ந்து பணியாற்றுகின்ற அரசசார்பற்ற நிறுவன உத்தியோகத்தர்கள், உளவளத் துணை உத்தியோகத்தர்கள், சிறுவர் இல்லங்களின் பொறுப்பாளர்கள், தனியார் கல்விநிலையங்களின் நிர்வாகிகள், துறைசார் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். (6-8-315)

# நினைவுதின கூட்டம்

(யாழ்ப்பாணம்)

பேராசிரியர் கைலாசபதியின் 42 ஆவது நினைவு தினக்கூட்டம் எதிர்வரும் 8 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை பி.ப 3.30 மணிக்கு கே.கே.எஸ் வீதி கொக்குவில் சந்தியில் அமைந்துள்ள தேசிய கலை இலக்கிய பேரவையின் கவிஞர் முருகையன் கேட்போர் கூடத்தில் ஓய்வு நிலை உதவிக் கல்விப் பணிப்பாளர் மு.இராஜநாயகம் தலைமையில் இடம்பெறவுள்ளது. (6-8)

# புளியம் பொக்கணையில் இடம்பெற்ற நடமாடும் சேவை

(தருமபுரம்)

கமநல காப்புறுதிச்சபையினால் கடந்த போகங்களில் பயிர் அழிவுகளுக்கு காப்புறுதி பெற்றவர்கள், பெற்ற காப்புறுதியில் திருப்தியின்மை காணப்படுபடுமாயின் அது தொடர்பாக மேன்முறையீடு செய்வதற்கான நடமாடும் சேவையினை கிளி நொச்சி மாவட்ட கமநல காப்பு றுதிச் சபையினரால் மேற் கொள்ளப்பட்டு வருகிறது.

கிளிநொச்சி மாவட்ட கமநல காப்புறுதிச் சபையினரால் நேற்று முன்தினம் புளியம் பொக்கணை கமநல சேவை நிலையத்தில் நடமாடும் சேவை முன்னெடுக்கப்பட்டது.

இதன்போது விவசாயிகள் தமது முறைப்பாடுகளினை முன்வைத்தனர். குறித்த நடமாடும் சேவையில் கிளிநொச்சி மாவட்ட கமநல காப்புறுதிச் சபை உதவிப்பணிப்பாளர் பி.பூரணச்சந்திரன் உள்ளிட்ட உத்தியோகத்தர்கள், விவசாயிகள் கலந்து கொண்டனர். (6-8-316)

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 3269

மிதுனா




சாமந்தி





ருக்சாயினி





வாதுசன்




நிரஞ்சன்




யுகேஸ்




நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampuri எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயருடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

Digitized by Noolaham Foundation
noolaham.org | aavanaham.org

## கல்கியின் பாகம் - 3

# பொன்னியின் செல்வன்

### காவியத் தொடர் 648





பட்டார். அவர் கூட மண்டை ஓட்டை மாலையாகப் போட்டுக் கொள்ளவில்லை கையிலும் எடுத்துக்கொண்டு திரியவில்லையே? காலாமுகர்கள் எதற்காக அப்படிச் செய்கிறார்கள்?

வாழ்க்கை அநித்தியம் என்பதே மறந்து விடாமலிருப்பதற்காக அவர்கள் அவ்வாறு செய்கிறார்கள். நீயும் நானும் திருநீறு பூசிக்கொள்கிறோமே, அது மட்டும் என்ன? இந்த மனித உடம்பு நிலையானது அல்ல. ஒரு நாள் சாம்பலாகப் போகிறதென்பதை மறந்து விடாமலிருப்பதற்குத் தானே திருநீறு பூசிக்கொள்கிறோம்!

பயம் ஒன்றுமில்லை அருவருப்புதான். போர்க்களத்தில் பகைவர்களைக் கொல்வதற்கும் மண்டை ஓடுகளை மாலையாகப் போட்டுக் கொள்வதற்கும் என்ன சம்பந்தம்?

உன்னுடைய எஜமானர் ஆதித்த கரிகாலர், வீர பாண்டியனுடைய தலையை வெட்டி எடுத்துக்கொண்டு வந்து ஊர்வலம் விடவில்லையா?

அவர் ஏதோ சபதம் செய்திருந்தபடியால் அவ்விதம் செய்தார். அதற்காகப் பிறகு எவ்வளவோ வருத்தப்

மனித தேகம் அநித்தியம் என்பது சரிதான் இது எரிந்து சாம்பலாகும் அல்லது மண்ணோடு மண்ணாகும், சிவபெருமானுடைய திருமேனி அப்படியல்லவே! பரமசிவன் ஏன் கையில் மண்டை ஓட்டை வைத்திருக்கிறார்?

தம்பி! சிவபெருமானுடைய கையில் உள்ள மண்டை ஓடு ஆணவத்தைக் குறிக்கிறது. ஆணவத்தை வென்றால் ஆனந்த நிலை ஏற்படும் என்பதைக் காட்டுகிறது. சிவபெருமான் கையில் மண்டை ஓட்டுடன் ஆனந்த நடனம் செய்கிறார் அல்லவா?

"மண்டை ஓடு எப்படி ஆணவத்தைக் குறிக்கும்? எனக்குத் தெரியவில்லையே?" "உனக்குத் தெரியாதது இன்னும் எவ்வளவோ இருக்கிறது. தம்பி! மண்டை ஓடு ஆணவத்தைக் குறிப்பது எப்படி என்பதை மட்டும் இப்போது தெரிந்துகொள்.

பிரம்மதேவனும், திருமாலும் ஒருசமயம் கர்வம் கொண்டார்கள். 'நான் பெரியவன் நான்தான் பெரியவன்' என்று சண்டையிட்டார்கள். சிவன் அவர்களுக்கு நடுவில் வந்தார்.

'என்னுடைய சிரசை ஒருவரும் என்னுடைய பாதத்தை ஒருவரும் கண்டுபிடித்துக் கொண்டு வாருங்கள் யார் பார்த்து விட்டு முதலில் வருகிறாரோ, அவர்தான் உங்களில் பெரியவர்' என்றார். மகாவிஷ்ணு வராக உருவங்கொண்டு சிவனுடைய பாதங்களைப் பார்ப்பதற்குப் பூமியைக் குடைந்து கொண்டு சென்றார். பிரம்மா அன்னப் பறவையின் உருக்கொண்டு வானத்தில் பறந்து சென்றார். திருமால் திரும்பி வந்து சிவனுடைய அடியைக் காண முடியவில்லை என்று உண்மையை ஒப்புக்கொண்டார். பிரம்மா திரும்பி வந்து சிவனுடைய முடியைப் பார்த்து விட்டதாகப் பொய் சொன்னார்! அப்போது சிவன் பிரம்மாவுக்கிருந்த ஐந்து தலைகளில் ஒன்றை கிள்ளி எடுத்து அவரைத் தண்டித்தார்.

ஆணவம் காரணமா கப் பிரம்மா சண்டையிட்டுப் பொய் சொன்ன படியால், அவருடைய தலை ஆணவத்துக்குச் சின்னமாயிற்று." வந்தியத் தேவன் எதையோ நினைத்துக் கொண்டவன் போல் இடி இடி , என்று சிரித்தான்.


என்னத்தைக் கண்டு இப்படி சிரிக்கிறாய், தம்பி!" "ஒன்றையும் கண்டு சிரிக்கவில்லை. ஒரு விடயம் நினைவுக்கு வந்தது அதனால் சிரித்தேன்.

(தொடரும்)



# சிறுவர் அரங்கம்

## ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு



கோவில் கோபுரத்தில் சில நீல நிறப் புறாக்களும் சில வெள்ளை நிறப் புறாக்களும் அடைக்கலமாகி இருந்து வந்தன. கோபுரத்தில் கும்பாபிஷேக வேலைகள் தொடங்க ஆரம்பித்ததால் இது நாள் வரை எதிரும் புதிருமாக இருந்து வந்த இருவகைப் புறாக் கூட்டமும் இப்போது ஒன்று கூடி வேறொரு இடம் தேடிப் புறப்பட்டன.

செல்லும் வழியில் ஓரிடத்தில் வெயிலில் உலர்த்துவதற்காக பரப்பப்பட்ட தானியங்களைகண்டதும்அனைத்தும் ஒன்று கூடி தானியங்களைத் தின்று தீர்த்து விட்டு மரக்கிளை ஒன்றில் அமர்ந்தன.

தானியத்தை உலர்த்தும் பொருட்டு பரப்பி விட்டு சென்ற வேடன் தானிய மணிகள் ஒன்று கூட இல்லாதது கண்டு அதிர்ச்சியடைந்தான். தானியங்கள் காயப் போட்ட இடத்தில் புறாக்களின் எச்சம் கிடப்பதை பார்த்து வேடன் என்ன நடந்தது என்பதை ஊகித்தான்.

நாளைக்கு இந்த புறாக்களை எப்படியும் வலை விரித்து பிடித்து விட வேண்டும் என்று முடிவு செய்து அதன்படி மறுநாள் தயார் செய்து வலை விரித்தான். அடுத்த நாள் அங்கே வந்த புறாக்கள் தானியத்தைப் பார்த்ததும், அதை உண்ணும் ஆசையில் வேகமாக தரையிறங்கி உண்ணத் தொடங்கின. சில மணித்துளிகளில் அதன் கால்கள் வலைகளில் சிக்கிக் கொண்டன.

சற்று தொலைவில் மறைந்திருந்த வேடன் நிலைமையை நன்கு புரிந்து கொண்டு புறாக்களை பிடிக்க ஓடி வந்தான். வேடன் வருவதைப் பார்த்த புறாக்கள் ஆபத்தை உணர்ந்து கொண்டு, உயிர் மீதுள்ள ஆசையினால் புறாக்கள் எல்லாம் ஒன்றாக இறக்கையை விரித்து பறக்க, வலையோடு புறாக்கள் பறக்க ஆரம்பித்தன.

உடனே வேடன், அய்யய்யோ... புறாக்கள் போனாலும் பரவாயில்லை.

நான் கஷ்டப்பட்டு தயாரித்த வலையும் அதோடு போகிறதே என்று புலம்பிக் கொண்டே, பறந்து செல்லும் புறாக்களின் பின்னே ஓடினான். பறந்து செல்லும் போதே, அதில் இருந்த வெள்ளைப் புறாக்கள் உடனே நீல நிறப் புறாக்களும் தன் பங்கிற்கு, நாங்கள்தான் வலிமையோடு பறந்தோம். உங்களுக்கு அழகு இருக்கலாம், ஆனால் ஆற்றல் கிடையாது என்று கூறிக் கொண்டு ஒன்றுக்கொன்று சண்டையிட்டுக் கொண்டே ப்றந்ததினால், அதன் பறக்கும் வேகம் குறைய ஆரம்பித்து, ஒரு மரக்கிளையில் வலை சிக்கிக் கொண்டது.

இதனைப்பார்த்த வேடனுக்கு மகிழ்ச்சி ஏற்பட்டது. ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு என்ற பழமொழிக் கேற்ப இப் புறாக்கள் தப்பி விடுமோ என்று பயந்தேன். நல்லவேளையாக ஒற்றுமை நீங்கினால் அனைவருக்கும் தாழ்வு என்ற நெறிப்படி பறந்த புறாக்களே நன்றி என்று புறாக்களைப் பார்த்து கூறிக் கொண்டே அவைகளை தனது கூடைக்குள் போடத் தொடங்கினான்.

நீதி: ஒன்றுபட்டால் உண்டு வாழ்வு.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

செயல்களைப் பற்றி யோசிப்பதிலேயே நேரத்தைச் செலவழிக்காமல் செயலைச் செய்வதில் நேரத்தை அதிகரித்தால் பயன் கிடைக்கும். - அறிஞர்

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## வீதிகளில் ஏற்படும் உடைவுகளை உடனடியாகச் செப்பனிடுங்கள்

வட மாகாணத்தில் பிரதான வீதிகள் உட்பட பெரும்பாலான வீதிகள் காபற் வீதிகளாக அமைக்கப்பட்டுள்ளன.

குறித்த வீதிகள் அமைக்கப்படுவதற்கு முன்னதாக இருந்த வீதிகளின் அவலத்தைச் சொல்லிமாளா.

குன்றும் குழியுமாக இருந்த வீதியில் வாகனங்கள் ஏறி விழுந்து எழுந்து பயணிக்கும்போதெல்லாம் வாகனங்களும் பழுதாகி, அதில் பயணிப்போரும் பாதிப்புக்கு ஆளாகினர்.

இருந்தும் கன் பெற்ற பெருவாழ்வு போல எங்கள் வீதிகளுக்குப் பெருவாழ்வு கிடைத்தது.

ஆம், வடக்கு - கிழக்கு மாகாணம் முழுமையிலும் காபற் வீதிகள் சிறப்பாக அமைக்கப்பட்டன.

இருந்தும் எம்மிடம் பெரும் பஞ்சமாக இருக்கின்ற திட்டமிடலும் நிதி இன்மையும் காரணமாக, காபற் வீதி அமைத்த பின்பு குடிதண்ணீர் விநியோகத்துக்கான குழாய்கள் வீதியோரமாக நிலத்தடியில் பொருத்தப்படுகிறது.

இதன்போது அருமந்த காபற் வீதிகளை வெட்டுகின்ற துர்ப்பாக்கிய நிலைமையும் ஏற்பட்டுள்ளது.

அவ்வாறு வெட்டப்பட்ட காபற் வீதிகள் மீளவும் புனரமைப்புச் செய்யப்படுகின்றனவாயினும் அஃது ஏலவே இருந்த காபற் வீதியின் தரத்துக்கு அமையாதிருப்பது மிகுந்த மனக்கவலையைத் தருகிறது.

எதுஎவ்வாறாயினும் எங்களின் வீதிகளைப் பாதுகாப்பது மிகவும் அவசியம். அது எங்களின் தார்மீகக் கடமை.

இருந்தும் கடந்த சில நாட்களுக்கு முன்னர் பெய்த கடும் மழை, வெள்ளம் காரணமாக காபற் வீதிகள் சிலவற்றில் உடைவுகள் ஏற்பட்டுள்ளன.

இவ்வாறு உடைவுகள் ஏற்படுவதற்கு காபற் வீதி அமைப்பில் இருந்த கவனக்குறைவும் தொழில்நுட்பப் பலவீனமுமே காரணம் எனலாம்.

எவ்வாறாயினும் காபற் வீதியில் ஏற்பட்டுள்ள சிறு உடைவுகளை உடனடியாகச் செப்பனிட வேண்டும்.

இதை நாம் செய்யத் தாமதிப்போமாயின் குறித்த சிறு உடைவு வீதி முழுவதையும் பழுதாக்கிவிடும்.

எனவே வீதிகள் மற்றும் தெருக்களுடன் சம்பந்தப்பட்ட அரச அமைப்புகள் வீதிக்கண்காணிப்புப் பணியை உடனடியாக மேற்கொண்டு, வீதிகளில் ஏற்பட்டுள்ள வெடிப்புகளை - குழிகளை சீர்செய்ய வேண்டும்.

இதுதவிர, கடும் மழை காரணமாக வெள்ளம் வாரடித்து ஓடியபோது வீதிகளின் இருமருங்கிலும் உள்ள மண் அணை அரித்து செல்வதால், வீதிகளின் ஓரங்கள் உடையக்கூடிய நிலைமை இருப்பது அவதானிக்கப்பட்டுள்ளது.

ஆக, இதுவிடயத்திலும் செப்பனிடல் பணிகள் முன்னெடுக்கப்பட்டு அனைத்து வீதிகளையும் பாதுகாத்து மிகவும் அவசியமாகிய போக்குவரத்துப் பாதைகளை பராமரிக்க வேண்டும்.

இது விடயத்தில் வீதி உடைவுகள் பற்றிய தகவல்களைப் பொதுமக்களிடம் இருந்து பெற்றுக் கொள்கின்ற செயற்றிட்டத்தையும் வீதி அமைப்புகள் செய்வது உத்தமமாகும்.

# யாழில் கைதான இந்திய மீனவர்களை விடுவிக்க நடவடிக்கை எடுங்கள்

## புதுச்சேரி முதலமைச்சர் ஜெய்சங்கருக்கு கடிதம்

(சென்னை)

யாழ்ப்பாணம் - சுண்டிக்குளம் கடற்பரப்பில் கைது செய்யப்பட்ட 18 இந்திய மீனவர்களையும் விடுவிப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி, புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி, இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கருக்குக் கடிதம் அனுப்பியுள்ளார்.

அத்துமீறி கடற்றொழிலில் ஈடுபட்ட குற்றச்சாட்டில் குறித்த 18 இந்திய மீனவர்களும் இலங்கைக் கடற்படையினரால் நேற்று முன்தினம் கைது செய்யப்பட்டனர்.

அதன்போது மீன்பிடிப் படகொன்றும் கைப்பற்றப்பட்டுள்ளதாகக் கடற்படைப் பேச்சாளர் கெப்டன் கயான் விக்ரமசூரிய தெரிவித்தார்.

பின்னர் குறித்த மீனவர்கள் பருத்தித்துறை நீதவான் நீதிமன்றில் முன்னிலைப்படுத்தப்பட்ட நிலையில் அவர்களை எதிர்வரும் 10ஆம் திகதி வரை விளக்கமறியலில் வைக்குமாறு உத்தரவிடப்பட்டுள்ளது.

இந்த நிலையில் குறித்த மீனவர்களை விடுவிப்பதற்காக இலங்கை அரசுடன் இணைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு இந்திய வெளிவிவகார அமைச்சர் எஸ்.ஜெய்சங்கரிடம் புதுச்சேரி முதலமைச்சர் என்.ரங்கசாமி கோரியுள்ளார்.

அதேநேரம் இந்த விடயத்தில் இந்திய வெளிவிவகார அமைச்சு உடனடியாக தலையீடு செய்ய வேண்டும் என, இந்திய பாராளுமன்ற உறுப்பினர் வி.வைத்தியலிங்கம் வலியுறுத்தியுள்ளார்.

இந்திய பாராளுமன்றில் இதனைக் குறிப்பிட்ட அவர், இது தொடர்பான கோரிக்கைக் கடிதம் ஒன்றையும் இந்திய வெளிவிவகார அமைச்சரிடம் சமர்ப்பித்ததாகத் தெரிவிக்கப்படுகிறது. (ம-7)

# ரயிலில் மோதுண்டு ரயில் ஊழியர் மரணம்

(கண்டி)

கண்டி ரயில் நிலையத்தினுள் ரயிலில் மோதுண்டதில் ஊழியர் ஒருவர் உயிரிழந்துள்ளதாக கண்டிப் பொலிஸார் தெரிவித்தனர்.

ரயில்வே திணைக்களத்தில் பணிப் பரிசோதகராகப் பணிபுரிந்த ஸ்ரீ லால் பிரேமரத்ன (வயது 58) என்பவரே உயிரிழந்துள்ளார்.

பேராதனையில் இருந்து கொழும்பு - கண்டி எக்ஸ் பிரஸ் புகையிரதம் வந்த போது, தேநீர் அருந்துவதற்காக ரயில் நிலையத்தின் சிற்றுண்டிச்சாலைக்கு சென்று கொண்டிருந்த சந்தர்ப்பத்தில் மற்றுமொரு ரயில் பாதைக்கு மாறிய போது இந்தச்சம்பவம் இடம்பெற்றுள்ளது.

விபத்தில் படுகாயமடைந்த ரயில் ஊழியர் கண்டி தேசிய வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்ட போது உயிரிழந்துள்ளார். (ம-7)

# பொலிஸ் காவலில் இருந்து தப்பிய சந்தேக நபர் கைது

பொலிஸ் காவலில் இருந்து தப்பிச் சென்ற சந்தேக நபர் ஒருவர் கைது செய்துள்ளதாகப் பொலிஸார் தெரிவித்தனர்.

இந்தச் சம்பவம் தொடர்பில் மேலும் தெரியவந்துள்ளதாவது,

கொட்டாவ - தலகல வீதியின் திபாங்கொட சந்திக்கு அருகில் இடம்பெற்ற விபத்தில் ஒருவர் உயிரிழந்துள்ளார்.

இந்நிலையில், இந்த விபத்து தொடர்பில் சந்தேக நபர் ஒருவர் பொலிஸாரால் கைது செய்யப்பட்டுள்ளார்.

பின்னர் கைது செய்யப்பட்ட சந்தேக நபர் பொலிஸ் காவலில் இருந்து தப்பிச் சென்றுள்ளார்.

இது தொடர்பில் பொலிஸார் மேற்கொண்ட விசாரணைகளில் சந்தேக நபர் மீண்டும் கைது செய்யப்பட்டுள்ளார்.

இதனையடுத்து சந்தேக நபர் நீதிமன்றில் ஆஜர்படுத்தப்பட்ட பின்னர் விளக்கமறியலில் வைக்கப்பட்டதாகப் பொலிஸார் தெரிவித்தனர். (ம-7)

# கொடிகாமத்தில் மின்கம்பத்துடன் மோதி வாகனம் விபத்து

கொடிகாமம் பொலிஸ் பிரிவுக்குட்பட்ட பருத்தித்துறை வீதியில் கொடிகாமம் படை முகாம் முன்பாக நேற்றுப் புதன்கிழமை பிற்பகல் இடம்பெற்ற விபத்தில் மின் கம்பம் ஒன்று முறிந்து விழுந்துள்ளது.

கொடிகாமத்தில் இருந்து வரணி நோக்கிப் பயணித்த மஹேந்திரா வாகனம் கொடிகாமம் படை முகாமை அண்மித்து கட்டுப்பாட்டினை இழந்து வீதியோரம் காணப்பட்ட மின் கம்பத்துடன் மோதியதில் இவ் விபத்து சம்பவித்துள்ளது.

இதில் மின் கம்பம் முறிந்து விழுந்து கொடிகாமம் மற்றும் வரணிப் பகுதிகளுக்கான மின்சாரம் தடைப்பட்டுள்ளது.

இதன்போது தெய்வாதீனமாக எவருக்கும் உயிர்ச்சேதம் ஏற்படவில்லை எனத் தெரிவிக்கப்படுகிறது.

விபத்துத் தொடர்பான மேலதிக விசாரணைகளை கொடிகாமப் பொலிஸார் முன்னெடுத்து வருகின்றனர். (ம-7.30)

### மெண்டிஸ் நிறுவனத்தின்

# மதுபான உற்பத்தி உரிமம் இடைநிறுத்தம்

(கொழும்பு)

5.7 பில்லியன் ரூபா வரி மற்றும் மேலதிக கட்டணங்களை செலுத்த தவறியதன் காரணமாக டபிள்யு.எம்.மெண்டிஸ் நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட மதுபான உற்பத்தி உரிமம் இன்று முதல் நிறுத்தப்படவுள்ளது.

குறித்த நிறுவனம் கலால் வரியை செலுத்தத் தவறியதன் காரணமாகவும் அது தொடர்பான 5.7 பில்லியன் ரூபா கலால் திணைக்களத்திற்குச் செலுத்தப்பட வேண்டிய தன் காரணமாகவும் இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது.

அதற்கமைய டபிள்யு.எம்.மெண்டிஸ் நிறுவனத்தின் மதுபான உற்பத்தி உரிமத்தை இன்று முதல் இடைநிறுத்துமாறு கலால் ஆணையாளர் நாயகம் உத்தரவிட்டுள்ளார்.

மேலும் மதுபான உற்பத்தி செயல்முறையை இன்று முதல் இடைநிறுத்தவும், வரி மற்றும் கூடுதல் கட்டணம் செலுத்தப்படாவிட்டால், நிறுவனத்திற்கு வழங்கப்பட்ட அனைத்து கலால் மதுபான உரிமங்களும் டிசம்பர் 31ஆம் திகதிக்குப் பின்னர் நீக்கப்படாது என்றும் கலால் திணைக்களம் தீர்மானித்துள்ளது.

கலால் கட்டளைச் சட்டத்தின் சட்ட விதிகளுக்கு அமைய இந்த நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக கலால் திணைக்களம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (ம-7)

# சுற்றுலாப் பயணிகளின் வருகையில் அதிகரிப்பு

(கொழும்பு)

இலங்கையின் சுற்றுலாத்துறை ஒரு முக்கிய மைல்கல்லை எட்டியுள்ளதாக சுற்றுலாத்துறையினர் தெரிவிக்கின்றனர்.

இதன்படி, இந்த வருடத்தின் முதல் 11 மாதங்களில் 1.8 மில்லியன் சுற்றுலாப் பயணிகளின் வருகை பதிவாகியுள்ளது.

அத்துடன், கடந்த நவம்பர் மாதத்தில் மொத்தமாக ஒரு இலட்சத்து 84 ஆயிரத்து 158 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்துள்ளனர்.

இது கடந்த ஜூலை மாதத்துக்குப் பிறகு மாதமொன்றில் பதிவான அதிக எண்ணிக்கையிலான சுற்றுலாப்பயணிகளின் வருகையாகும் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.


நவம்பர் மாதத்தில் சுற்றுலாப் பயணிகளின் வருகையானது, ஒக்ரோபர் மாதத்தில் பதிவான ஒரு இலட்சத்து 35 ஆயிரத்து 907 என்ற வருகையுடன் ஒப்பிடுகையில் 36 சதவீத அதிகரிப்பைக் குறிக்கிறது.

இந்த ஆண்டின் இதுவரையான காலப்பகுதியில் கடந்த பெப்ரவரி மாதத்திலேயே அதிகளவான சுற்றுலாப் பயணிகள் நாட்டுக்கு வருகை தந்துள்ளனர்.

குறித்த மாதத்தில் 2 இலட்சத்து 18 ஆயிரத்து 350 சுற்றுலாப் பயணிகள் இலங்கைக்கு வந்திருந்ததாகச் சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தரவுகள் தெரிவிக்கின்றன. (ம-7)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# டிசம்பர் மாத இராசி பலன்கள்-2024



கிரகநிலை - இராசியில் சுக்கிரன் - தைரிய வீரிய ஸ்தானத்தில் சனி - சுக ஸ்தானத்தில் ராகு - ரண ருண ரோக ஸ்தானத்தில் குரு(வ) - அஷ்டம ஸ்தானத்தில் செவ்வாய் - தொழில் ஸ்தானத்தில் கேது - அயன சயன போக ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் இருந்து தைரிய வீரிய ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும். எதையும் செய்து முடிக்கும் துணிச்சல் அதிகரிக்கும். எதிலும் வெற்றியும் சந்தோஷத்தையும் தரும். பணம் வருவது அதிகரிக்கும். எதிர்ப்புகள் அகலும். நீண்ட நாட்களாக இருந்து வந்த பிரச்சினைகளில் தீர்வு கிடைக்கும்.

தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்களுக்கு கீழ் நிலையில் உள்ளவர்களால் நன்மை உண்டாகும். துணிச்சலாக முயற்சிகள் மேற்கொண்டு வியாபாரத்தை விரிவுபடுத்துவீர்கள். உத்தியோகத்தில் இருப்பவர்கள் முன்னேற்றம் காண்பார்கள். மேலதிகாரிகளால் நன்மை ஏற்படும்.

குடும்பத்தில் குதூகலம் உண்டாகும். உங்களது வார்த்தைகளுக்கு மதிப்பு கூடும். கணவன், மனைவிக்கிடையே நெருக்கம் அதிகரிக்கும். பிள்ளைகளுடன் மகிழ்ச்சியாக பொழுதை கழிப்பீர்கள். குடும்பத்தில் இருந்து வந்த இறுக்க நிலை மாறும். பெண்கள் காரியங்களை துணிச்சலாக செய்து முடித்து வெற்றி காண்பீர்கள். எதிர்ப்புகள் விலகும். நீண்ட நாட்களாக இழுபறியாக இருந்த காரியம் நடந்து முடியும்.

கலைத்துறையினருக்கு மதிப்பும், மரியாதையும் அதிகரிக்கும். சிறப்பாக பணிபுரிந்து பாராட்டு பெறுவீர்கள். ஆடை ஆபரணங்கள் சேரும். விளையாட்டுத்துறையில் உள்ளவர்களுக்கு பரிசும் பாராட்டுதல்களும் கிடைக்கும். அரசியல் துறையினருக்கு பயணங்களால் மகிழ்ச்சியும், ஆதாயமும் கிடைக்கும். நிலம், வீடு, வாகனம் வாங்கும் வாய்ப்புகள் கை கூடி வரும்.

நீதிமன்ற வழக்குகளிலிருந்து விடுபடுவீர்கள். வேதாந்த விடயங்களில் நாட்டம் அதிகரிக்கும். மாணவர்கள் கல்வியில் வெற்றி பெற துணிச்சலாக முயற்சிகளை மேற்கொள்வீர்கள். எதிர்பார்த்த காரியங்கள் சாதகமாக நடக்கும்.




## எல்லா விதத்திலும் நன்மை உண்டாகும்!

**மூலம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் இருப்பவர்கள் தங்களது தொழில் விரிவாக்கம் செய்யும் முயற்சியில் ஈடுபடுவீர்கள். அதற்கு தேவையான பண உதவியும் கிடைக்க பெறுவீர்கள். ஆனால் போட்டிகள் பற்றிய கவலைகள் தோன்றும். சமாளிக்க முயல்வீர்கள்.

**பூராடம்:** இந்த மாதம் உத்தியோகத்தில் இருப்பவர்கள் தங்களது திறமையால் அலுவலக பணியை சிறப்பாக செய்வார்கள். புதிய தொடர்புகள் மகிழ்ச்சி தருவதாக இருக்கும். குடும்பத்தில் சுபகாரியம் நடைபெறும். மனைவி குழந்தைகளுடன் சந்தோஷமாக பொழுதை கழிப்பீர்கள். ஆன்மீக பணிகளில் நாட்டம் அதிகரிக்கும். பொன், பொருள் சேர்க்கை உண்டாகும்.

**உத்திராடம் 1 ஆம் பாதம்:** இந்த மாதம் நண்பர்கள் மூலம் உதவிகள் கிடைக்கும். வாகன லாபம் ஏற்படும். தகப்பனாருடன் வீண் வாக்குவாதங்களை தவிர்ப்பது நல்லது. வெளி தொடர்புகளில் எச்சரிக்கை தேவை. எண்ணப்படி காரியங்களை செய்து முடிக்கும் சூழ்நிலை ஏற்படும். செலவுகளை குறைக்க திட்டமிடுவது நல்லது. கௌரவம் உயரும்.

**பரிகாரம்:** சித்தர்களை வணங்கி வர மனதில் தைரியம் கூடும். காரியங்களில் சாதகமான பலன் கிடைக்கும்.

**அதிஷ்ட கிழமைகள்:** வியாழன், வெள்ளி.

**அதிஷ்ட தினங்கள்:** 11, 12, 13

**சந்திராஷ்டம தினங்கள்:** 18, 19



கிரகநிலை - தன வாக்கு குடும்ப ஸ்தானத்தில் சனி - தைரிய வீரிய ஸ்தானத்தில் ராகு - பஞ்சம ஸ்தானத்தில் குரு(வ) - களத்திர ஸ்தானத்தில் செவ்வாய் - பாக்கிய ஸ்தானத்தில் கேது - லாப ஸ்தானத்தில் சூரியன், புதன் (வ), சந்திரன் - அயன சயன போக ஸ்தானத்தில் சுக்கிரன் என வலம் வருகிறார்கள்.

**கிரகமாற்றங்கள்:** 03-12-2024 அன்று சுக்கிரன் அயன சயன போக ஸ்தானத்தில் இருந்து இராசிக்கு மாறுகிறார். 15-12-2024 அன்று சூரியன் லாப ஸ்தானத்தில் இருந்து அயன சயன போக ஸ்தானத்திற்கு மாறுகிறார். 30-12-2024 அன்று சுக்கிரன் இராசியில் இருந்து தன வாக்கு குடும்ப ஸ்தானத்திற்கு மாறுகிறார்.

**பலன்கள்:** இந்த மாதம் எதையும் யோசித்து செய்வது நன்மை தரும். கோபமாக பேசுவதை தவிர்த்து நிதானமாக பேசி செயற்படுவது காரிய வெற்றிக்கு உதவும். எந்த விடயத்திலும் மிகவும் எச்சரிக்கையாக இருப்பது நல்லது. வீண் குற்றச்சாட்டிற்கு ஆளாகலாம். கவனம் தேவை.

உத்தியோகத்தில் இருப்பவர்கள் பயணங்கள் செல்லும்போதும் வாகனங்களில் செல்லும்போதும் கவனம் தேவை. வேலை செய்யும் இடத்தில் இருந்து வந்த மனவருத்தம் நீங்கும். தொழில் வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் வாடிக்கையாளர்களிடம் நிதானமாக பேசி அனுசரித்து செல்வது நன்மை தரும். எதிர்பார்த்த பணம் வந்து சேரும்.

குடும்பத்தில் ஏதாவது ஒரு வகையில் திடீர் சச்சரவுகள் தோன்றலாம். அதற்கு இடம் கொடுக்காமல் நடந்து கொள்வது நன்மை தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம் தேவை. பொருட்களை கவனமாக பார்த்துக்கொள்வது நல்லது. குழந்தைகளிடம் இருந்து வந்த கருத்து வேற்றுமைகள் நீங்கும். பெண்கள் கோபத்தை தவிர்த்து நிதானமாக பேசுவது காரிய வெற்றிக்கு உதவும். யோசித்து செய்யும் வேலைகள் சாதகமாக முடியும்.

கலைத்துறையினருக்கு பாராட்டுகள் வரும். வெளிநாட்டுப் பயணங்களும் இனிதே அமையும். எதிர்பார்த்த ஆதாயம் கிடைக்கும். உறவுநிலை சிறக்க விட்டுக் கொடுத்தல் அவசியமாகிறது. கூட்டுத்தொழிலில் அதிகம் அக்கறை தேவை. அரசியல் துறையினருக்கு நீண்ட நாளாக இருந்து வந்த பிரச்சினைகள் விலகும்.

திடீர் செலவுகள் ஏற்படும். சிக்கன நடவடிக்கை அவசியம் தேவை. உழைப்புக்கு முக்கியத்துவம் கொடுத்து அயராது பாடுபவர்கள் அதிக பயன் பெறுவார்கள். பயணத்தால் அனுகூலம் உண்டு. மாணவர்கள் திட்டமிட்டு பாடங்களை படிப்பது வெற்றிக்கு உதவும். எதிலும் அவசரம் காட்டாமல் நிதானத்தை கடை பிடிப்பது நல்லது.




## எதிர்பார்த்த பணம் வந்து சேரும்!

**உத்திராடம் 2, 3, 4 ஆம் பாதங்கள்:** இந்த மாதம் எடுத்துக் கொண்ட காரியங்களில் ஏற்படும் சந்தேகங்களை அவ்வப்போது போக்கிக் கொள்வது நல்லது. திட்டமிட்டு செயலாற்றுவது முன்னேற்றத்திற்கு உதவும். சிக்கலான பிரச்சினைகளையும் எளிதாக தீர்ப்பீர்கள். பணவரத்து இருக்கும். திறமையான செயல்களால் புகழும், அந்தஸ்தும் உயரும்.

**திருவோணம்:** இந்த மாதம் பேச்சின் இனிமை சாதுரியம் இவற்றால் எடுத்த காரியங்கள் எல்லாம் கைகூடும். பயணங்கள் ஏற்படலாம். ஆன்மீக பணிகளில் நாட்டம் செல்லும். உங்களது பொருட்களை கவனமாக பாதுகாத்துக் கொள்வது நல்லது. வாகனங்களில் செல்லும் போதும், ஆயுதம், நெருப்பு இவற்றை கையாளும் போதும் கவனம் தேவை.

**அவிட்டம்:** இந்த மாதம் தொழில், வியாபாரத்தில் ஈடுபட்டு இருப்பவர்கள் கூடுதலாக பணியாற்ற வேண்டும். ஓடர்கள் கிடைக்க அலைய வேண்டி இருக்கும். பணவரத்து இருந்தாலும் கொடுக்கல் வாங்கலில் கவனம் தேவை. உத்தியோகத்தில் இருப்பவர்கள் கவனமாக செயற்படுவது நல்லது. புதிய பதவிகள் தொடர்பான விடயங்கள் தாமதப்பட்டாலும் பொறுப்புகள் அதிகரிக்கும்.

**பரிகாரம்:** சனிக்கிழமைகளில் சனீஸ்வரபகவானை நல்லெண்ணை தீபம் ஏற்றி வணங்கி வர எல்லா காரியங்களும் வெற்றியடையும். உடல் ஆரோக்கியம் பெறும்.

**அதிஷ்ட கிழமைகள்:** செவ்வாய், புதன், வெள்ளி.

**அதிஷ்ட தினங்கள்:** 14, 15

**சந்திராஷ்டம தினங்கள்:** 20, 21, 22

(தொடரும்)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## வாக்கெடுப்பின்றி...

கடந்த நவம்பர் 21ஆம் திகதி 10 ஆவது பாராளுமன்றத்தின் முதல் அமர்வின்போது, ஜனாதிபதி அரசாங்கத்தின் கொள்கைப் பிரகடனத்தை முன்வைத்தார்.

இது தொடர்பான விவாதம் நேற்றுக் காலை 9.30 மணி முதல் மாலை 5.00 மணி வரை நடைபெற்றது.

இதன்போதே கொள்கைப் பிரகடன உரை வாக்கெடுப்பின்றி நிறைவேற்றப்பட்டது. (ம-7)

## பூநகரியில்...

பொலிஸார் விசாரணைகளை மேற்கொண்டு வருகின்றனர்.

சடலம் பிரேத பரிசோதனைக்காக கிளிநொச்சி வைத்தியசாலையில் ஒப்படைக்கப்பட்டுள்ளது. (ம-7,316)

## யாழ்.இணு...

மாவீரர் நாள் தொடர்பிலும், தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பின் தலைவரின் புகைப்படங்களை தனது முகநூலில் பகிர்ந்த குற்றச்சாட்டில் கடந்த வெள்ளிக்கிழமை இணுவிலைச் சேர்ந்த இளைஞனை பயங்கரவாதத் தடைச்சட்டத்தின் கீழ், பயங்கரவாத தடுப்புப் பிரிவினர் கைது செய்திருந்தனர்.

கைது செய்த இளைஞனை யாழ்ப்பாணத்தில் உள்ள பயங்கரவாதத் தடுப் புப் பிரிவினரின் அலுவலகத்தில் சுமார் 72மணித்தியால விசாரணைகளின் பின்னர், ஞாயிற்றுக்கிழமை மன்றில் முற்படுத்திய நிலையில் நேற்றைய தினம் புதன்கிழமை வரையில் விளக்க மறியலில் வைக்குமாறு மன்று உத்தரவிட்டிருந்தது.

இந்நிலையில் குறித்த வழக்கு நேற்று மன்றில் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டவேளை, குறித்த நபரை 2 இலட்ச ரூபாய் பெறுமதியான இரண்டு ஆள் பிணையில் செல்ல அனுமதித்த மன்று, பயணத் தடையும் விதித்துள்ளது. (ம-7,33)

## யாழ்.அரியாலை...

ழந்தவராவார்.

திடீர் சுகவீனம் காரணமாக யாழ் போதனா வைத்தியசாலையில் சிகிச்சை பெற்று வந்த நிலையில் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை மாலை 4.00 மணியளவில் சிகிச்சை பலனின்றி உயிரிழந்துள்ளார். (ம-7)

## மேதகுவுக்கு...

ஆற்றியபோதே அவர் இவ்வாறு கூறினார். தொடர்ந்தும் உரையாற்றிய அவர்,

"வரலாற்றை அர்ப்பணிப்பிலிருந்து ஆரம்பிக்க ஆசைப்படுகின்றேன். என் உயிரிலும் மேலான, என் இனத்தின் மானம் காத்த வீரத் தமிழன், இருந்தால் தலைவன்... இல்லையேல் இறைவன் எனப் போற்றப்படுகின்ற அன்புக்கும், மதிப்பிற்குமுரிய மேதகு அவர்களுக்கும், அவர் காட்டிய வாழ்வில் உயிரைத் துச்சமென மதித்து என் இனத்தின் மானம் காத்த வீரமறவர்களுக்கும், அதேபோல் இதுவரை காலமும் நடந்த இந்தக் கோர யுத்தத்தால் பாதிக்கப்பட்டு உயிரிழந்த சகல தமிழ், முஸ்லிம், சிங்கள இளைஞர்களுக்கும், முக்கியமாக ரோஹன விஜேவீர மற்றும் அவர்களுடைய தோழர்களுக்கும் எனது வீர வணக்கத்தையும், அஞ்சலியையும் தெரிவித்துக் கொள்கின்றேன்"

"வடக்கு மாகாண மக்களைப் பிரதிநிதித்துவப்படுத்தி இந்தச் சபைக்கு நான் தெரிவு செய்யப்பட்டுள்ளேன். மிகவும் பொறுப்புடனும், நன்றியுடையவனாகவும் இதனைக் கூறிக்கொள்கின்றேன்.

இந்நாட்டில், சமாதானம் மற்றும் சமத்துவத்தை அடைய வேண்டும் என்பதற்காக தன்னுயிரை நீத்த ஈழ உறவுகளுக்கும், அதேபோல் சிங்கள மற்றும் முஸ்லிம் உறவுகளையும் இந்த இடத்தில் நினைவுகூர விரும்புகின்றேன்.

இந்த நேரத்தில் எனது தந்தையையும் நினைவுகூரக் கடமைப்பட்டுள்ளேன். அவர் 1966ஆம் ஆண்டு இலங்கை பொலிஸ் கால்பந்தாட்ட அணியின் தலைவராகவும் ஒரு வீரராகவும் இருந்தார்.

1983ஆம் ஆண்டு அப்போது நிலவிய சூழ்நிலை காரணமாக நாங்கள் யாழ்ப்பாணத்தில் இருந்து வெளியேற நேரிட்டது.

எனினும், நான் உண்மையைக் கூறக் கடமைப்பட்டுள்ளேன். இரண்டு தசாப்தங்கள் எனது தந்தை விடுதலைப் புலிகளின் ... சேவையாற்றி... கொள்கின்றேன்.

எவ்வாறாயினும், எனது தந்தை இறுதி யுத்தத்தின்போது காணாமல் ஆக்கப்பட்டார். என்னை மன்னித்துக் கொள்ளுங்கள். நான் உண்மையை பேச வேண்டியிருக்கின்றது. நான் இன்று இங்கிருப்பது நாட்டைப் பிரிப்பதற்காக அல்ல. நாட்டில் ஒற்றுமையும் சமாதானமும் நிலவ வேண்டும். அதனையே நாங்கள் வேண்டிக்கொள்கின்றோம்.

நாங்கள் அனைவரும் ஒன்றிணைந்து, பிரிவினைகளும் இன்றி இந்த நாட்டைக் கட்டியெழுப்ப வேண்டும். நான் மருத்துவராகக் கடமையாற்றிய காலப்பகுதியில் பல்வேறு ஊழல் மோசடிகளைக் கண்டறிந்து வெளிப்படுத்தியுள்ளேன்.

இதனால் பல எதிர்ப்புகளை நான் சந்திக்க நேரிட்டது. இந்தப் பாராளுமன்றம் சுயாதீனமாக செயற்படும் என நான் நம்புகின்றேன். இதன் ஊடாக பொறுப்புக்கூறல் மற்றும் அனைவருக்கும் சமத்துவம் கிடைக்கும் என நம்புகின்றேன்.

கடந்த காலங்களில் எமக்கு ஏற்பட்ட கடுமையான காயங்களுக்கு நாம் நிவாரணம் தேட வேண்டும். எமக்கு மிகவும் துயரமான ஒரு கடந்த காலம் இருக்கின்றது. பலர் தங்களின் சொந்த இடங்களைவிட்டு இடம் பெயர்ந்துள்ளனர்.

இந்நிலையில், அவர்களை மீளக் குடியமர்த்த வேண்டும். அவர்களுக்குப் பாதுகாப்பு வழங்க வேண்டும். வடக்குக் கிழக்கில் அதிகளவான ஆயுதம் தாங்கிய படையினர் நிலை நிறுத்தப்பட்டுள்ளனர். இதற்கு நல்லிணக்கம் என்றபெயரில்தீர்வு காண வேண்டும்.

மேலும் புலம்பெயர் தேசங்களில் உள்ள தமிழ் மக்களுக்கு இலங்கை குடியுரிமை பெற்றுக் கொடுத்து அவர்கள் பூர்வீகத் தாய் நிலத்திற்கு திரும்ப வழி செய்ய வேண்டும்" என அர்ச்சுனா எம்.பி வலியுறுத்தினார்.(ம-7)

## தர...

ஒழுங்குமுறை அதிகார சபையின் பதிவுச் சான்றிதழ் இல்லாத சுமார் ஐநூறு தரமற்ற மருந்துகள் ... நோயாளர்களின் உயிருக்கு ஆபத்து ஏற்பட்டுள்ளதாக வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.

அரசு மருத்துவமனைகளின் அவசரகால கொள்முதல்களிலிருந்து இந்த நாட்டில் 40 சதவீத மருந்துகள் பதிவு செய்யப்படவில்லை என மருத்துவமனை இயக்குநர்கள் குழு தெரிவித்துள்ளது.

பல வைத்தியசாலை பணிப்பாளர்களும் இந்த உண்மைகளை மருந்து மீளாய்வுக் கூட்டத்தில் சுகாதார பிரதானிகளிடம் சுட்டிக்காட்டியுள்ளனர்.

மருந்து ஒழுங்குமுறை ஆணையத்தின் முறையான மறுபதிவு மற்றும் புதிதாகப் பதிவு செய்யப்பட்ட மருந்துகளின் சான்றிதழ்கள் சம்பந்தப்பட்ட நிறுவனத்திற்கு வழங்கப்படுவதற்கு முன்பாக, தலைமை நிர்வாக அதிகாரி தன்னிச்சையாக விலைகளை ஒழுங்குபடுத்தியதால் இந்த நிலை ஏற்பட்டுள்ளதாக சுகாதாரத் துறை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ம-7)


மஹஜன சம்பத — திகதி 2024.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 5675 — J 6 8 8 1 1 9
அத சம்பத — J 8 1 1 9 — சீட்டிழுப்பு இலக்கம் 0250
National Lotteries Board

தன நிதானய — திகதி 2024.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 1705 — S 30 31 33 47 S — Double Chance 08312

மெகா பவர் — திகதி 04/12/2024 — சீட்டிழுப்பு இலக்கம் 2023 — C 15 21 37 52 72 — 085458

லக்கி 7 VIP — திகதி 2024.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 0501 — P 3 5 6 9 6 8 P

கொவிசெத — சீட்டிழுப்பு இலக்கம் 3917 — சீட்டிழுப்பு திகதி 04.12.2024 — I 13 22 30 50 — I 095952

HANDAHANA உத்தியோகபூர்வ முடிவுகள் — சீட்டிழுப்பு திகதி 2024.12.04 — சீட்டிழுப்பு இலக்கம் 984 — மேஷம் 14 24 25 49 மேஷம் — 167313 — 30

உத்தியோகபூர்வ முடிவுகள்
ஷனிடா சம்பத — 04.12.2024 — வெற்றி வாரம் 383 — U 0 6 1 9 5 0 — 45838 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,643,036.40 — DLB

SUPER BALL — சீட்டிழுப்பு வாரம் 2649 — சீட்டிழுப்பு திகதி 2024.12.04 — தினம் புதன்கிழமை — 06 19 68 71 T — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.71,983,665.60 — DLB

சனிதா — திகதி 04.12.2024 — வெற்றி வாரம் 4810 — 09 33 45 59 D — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.59,260,005.60 — 97064 — DLB

ராசி — சீட்டிழுப்பு வாரம் 4361 — சீட்டிழுப்பு திகதி 04.12.2024 — தினம் புதன்கிழமை — 03 11 34 46 — மேடம் — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.9,332,044.80 — 114599 — DLB

ஆங்கில எழுத்து, சுப்பர் இலக்கம் மற்றும் வெற்றி இலக்கம் — D 15 09 21 30 44 — 1825 — 04.12.2024 புதன்கிழமை — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.557,199,571.20 — DLB

ஜயோதா Jayoda — திகதி 2024.12.04 — வெற்றி வாரம் 2083 — 04 40 43 52 L — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.26,639,538.40 — DLB

ADA KOTIPATHI — புதன்கிழமை — வெற்றி வாரம் 2475 — சீட்டிழுப்பு திகதி 2024.12.04 — அடுத்த சுப்பர் ஜக்பொட் ரூ.51,530,410.40 — 12 15 35 62 Y — 439072 — DLB


Digitized by Noolaham Foundation. noolaham.org | aavanaham.org

## வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில்

# அமைதியின்மை ஏற்படுத்த இடமளிக்கப்பட மாட்டாது

## பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால

வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் மீண்டும் இனவாதத்தை தூண்டவும் அதன் ஊடாக அமைதியின்மையை ஏற்படுத்தவும் ஒருபோதும் அரசாங்கம் இடமளிக்காது என பொதுமக்கள் பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜேபால தெரிவித்தார்.

பாராளுமன்றத்தில் நேற்றுப் புதன் கிழமை விசேட உரையொன்றை நிகழ்த்தியபோதே அவர் இவ்வாறு கூறினார்.

இதன்போது மேலும் கருத்து வெளியிட்ட அவர், கடந்த சில நாட்களாக மாவீரர் நிகழ்வுகள் தொடர்பில் கருத்துகள் வெளியாகியிருந்தன. உயிரிழந்த தமது உறவுகளை நினைவுகூர உறவினர்களுக்கு முழுமையான உரிமை உண்டென்பது அரசாங்கத்தின் நிலைப்பாடாக இருந்தது.

புலிகள் அமைப்பு தடைசெய்யப்பட்ட பயங்கரவாத அமைப்பாக இருப்பதால் குறித்த அமைப்பின் கொடி, பாடல்களை நினைவேந்தல்களில் பயன்படுத்த முடியாதென கூறினோம். கடந்த 21ஆம் திகதிக்கும் 27ஆம் திகதிக்கும் இடையில் வடக்கில் 244 நினைவேந்தல் நிகழ்வுகள் நிகழ்ந்துள்ளன.

இவற்றில் 10 நிகழ்வுகளில் மாத்திரம் புலிகளின் பாடல்கள் பயன்படுத்தப்பட்டுள்ளன. இதுதொடர்பில் பொலிஸார் சட்டத்தை நடைமுறைப்படுத்தியுள்ளனர். சுன்னாகத்தில் ஒருவர் புலிகளை மீள் உருவாக்கம் செய்ய முற்பாட்டார் என்ற குற்றச்சாட்டில் கைதுசெய்யப்பட்டு யாழ். நீதிமன்றில் ஆஜர்ப்படுத்தப்பட்டதுடன், டிசம்பர் 4ஆம் திகதிவரை (நேற்று) அவர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார்.

வடக்கில் நடைபெற்ற நிகழ்வுகளை மையப்படுத்தி தெற்கில் சமூக ஊடகங்களில் உண்மைக்குப் புறம்பான வகையில் கருத்துகள் பகிரப்பட்டன. இவர்கள் பகிர்ந்துள்ள படங்கள் மற்றும் காணொளிகள் 2018, 2017 காலப்பகுதிக்கு உரியவை என்பதுடன், அவற்றில் பெரும்பாலானவை வெளிநாடுகளின் நடத்தப்பட்ட நிகழ்வுகளுக்கானது.

அரசியல் ரீதியாக தோல்விகண்டுள்ள சில குழுக்களால் இவ்வாறான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டுள்ளமை தெரியவந்துள்ளது. வடக்கில் ஒருவரும் தெற்கில் பலரும் இதுதொடர்பில் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொரலஸ்கமுவையில் இந்த குற்றச்சாட்டின் பிரகாரம் ஒருவர் கைதுசெய்யப்பட்டார். இவர் கடந்த பொதுத் தேர்தலில் சிலிண்டர் சின்னத்தில் போட்டியிட்ட நபர். திட்டமிட்ட வகையில் மீண்டும் வடக்கிற்கும் தெற்கிற்கும் இனவாதத்தைத் தூண்டும் வகையில் இவர்கள் செயல்பட்டுள்ளமை அறிய முடிகிறது.

இந்த கைதுகளை ஊடகச்சுந்திரம் அல்லது ஜனநாயகத்துக்கு எதிரானது என்ற போர்வையில் கருத்துகளை முன்வைக்க சிலர் முற்படுகின்றனர். அரசியலமைப்பு ரீதியாக உறுதிப்படுத்தப்பட்டுள்ள கருத்து மற்றும் பேச்சு சுதந்திரத்தை பாதுகாப்பதில் நாம் உறுதியாக இருக்கிறோம்.

இனவாதத்தால் உருவாக்கப்பட்ட பிரச்சினைகளால் பல தசாப்தங்களாக எமது இளைஞர்கள் தமது உயிர்களை தியாகம் செய்திருந்தனர். ஆட்சியாளர்கள் தமது அதிகாரத்தை தக்கவைத்துக்கொள்ளவும், பெற்றுக்கொள்ளவும் இனவாதத்தைப் பயன்படுத்திக்கொண்டனர்.

மலட்டுக் கொத்து எனக் கூறி சிலர் அதிகாரத்தை கைப்பற்றினர். அதனால் அவர்களுக்கு நன்மை கிடைத்தது. ஆனால், நாட்டு மக்களுக்கு எந்த நன்மையும் ஏற்படவில்லை. எம்மைப் பற்றியும் ஜனாதிபதி பற்றியும் போலியான காணொளிகளை உருவாக்கி பரப்புகின்றனர். ஆனால், அவற்றுக்கு நாம் அஞ்சப்போவதில்லை.

இனவாதத்தை தூண்டி இந்த நாட்டை மீண்டும் தீவைக்க அனுமதியளிக்கமாட்டோம். வடக்கிற்கும் தெற்கிற்கும் இடையில் மீண்டும் இனவாதத்தை தூண்டி அமைதியின்மையை ஏற்படுத்த நாம் சிறிதளவேனும் இடமளிக்க போவதில்லை.

இனவாதத்தை கட்டுப்படுத்த நாட்டில் தற்போது உள்ள சட்டம் போதுமானதாக இல்லாவிட்டால் புதிய சட்டங்களையேனும் உருவாக்கி இனவாதத்தை ஒழித்து நாட்டு மக்கள் எதிர்காலத்தில் ஐக்கியமாகவும் சமாதானமாகவும் வாழும் சூழலை உருவாக்குவோம் என்றார். (ம-7)


வீடு வாடகைக்கு வேண்டும்
யாழ்ப்பாணம், நல்லூர், கல்வியங்காடு, இருபாலை, கோப்பாய், திருநெல்வேலி ஆகிய பகுதியில் வீடொன்று வாடகைக்கு வேண்டும்.
தொடர்புகளுக்கு (2683)
077 9191 529

உலர் உணவுப் பொருட்கள்
அனர்த்த கால நிவாரணத்திற்காக உலர் உணவுப் பொதிகளை வழங்க விரும்புவோர் எம்மிடம் சிறந்த விலையில் மொத்தமாகக் கொள்வனவு செய்யலாம்.
Happy Supermarket
உரும்பிராய்
077 350 4700
(598)

V2 VISA SERVICES
கனடா
077 77 20 322
077 77 19 322
Visit Visas
Air Tickets
• கனடா PASSPORT APPOINMENTS
விமான பயணச்சீட்டுக்கள்
• Student Visas • Online Appointments
• இந்தியா Visas • Online Visas - All countries
• Police Clearance • Travel Insurance
Sri lankan Visa Extention
வெளிநாட்டவருக்கான இலங்கை விசா நீடிப்பு
(C-1722)





Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை வலம்புரி நியூஸ் பேப்பர் (பிறைவேற்) லிமிட்டெட் ஸ்தாபனத்தாரால் இல.191, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 05.12.2024 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.